எங்கள் போர் ஆயுதங்கள் !

(OUR WEAPONS OF WARFARE)

தயவு செய்து இதன் விலையான ரூ 5/- ஐ
அனுப்பி புத்தக ஊழியத்தை ஆதரியுங்கள்

J சாம் ஜெபத்துரை, M.A.,

வெளியிடுவோர் :

J. சாம் ஜெபத்துரை
50, ரெயில்வே ஸ்டேஷன் ரோடு,
கோடம்பாக்கம், சென்னை 600 024.

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய *7* ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் *200* ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக *(E-Books)* இலவசமாக (மத்தேயு *10:8*) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் *(Download)* செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: *www.WordOfGod.in*

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் *(E-Book)* வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய *WhatsApp* எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ *(Email)* எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

விலை ரூ. 5-00

இதே ஆசிரியரின் மற்ற ஆவிக்குரிய புத்தகங்கள்

1.	கல்வாரிப் பாதையில் நீ!	ரூ	4	00
2.	என்னை பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே!	ரூ	4	00
3.	ஜெயமளிக்கும் கிறிஸ்துவின் இரத்தம்	ரூ	4	00
4.	ஆயத்தப்படு; ஆயத்தப்படுத்து	ரூ	4	00
5.	எங்கள் போர் ஆயுதங்கள்	ரூ	5	00
6.	பலியின் உடன்படிக்கை	ரூ	4	00
7.	எழுப்புதல் எப்பொழுது?	ரூ	4	00
8.	அன்பின் தேவனின் ஆறுதல்	ரூ	4	00
9.	ஊழியனே உனக்கு	ரூ	2	00
10.	துதியின் வல்லமை	ரூ	4	00
11.	என்னை ஆசீர்வதியும் ஆண்டவரே	ரூ	4	00
12.	வல்லமையான 60 சிறுகதைகள்	ரூ	4	00
13.	ஆறுதலான 60 தியானங்கள்	ரூ	4	00
14.	கிறிஸ்மஸ் பிரசங்கங்கள்	ரூ	4	00
15.	அன்றன்றுள்ள அப்பம்...ஆண்டு சந்தா	ரூ	15	00

வாங்கி வாசியுங்கள்! புத்தக ஊழியங்களை ஊக்குவியுங்கள்! அநேக ஆவிக்குரிய புத்தகங்கள் வெளிவர ஜெபியுங்கள்.

புத்தகங்கள் கிடைக்குமிடம் :

J. சாம் ஜெபத்துரை M.A.,
50, ரெயில்வே ஸ்டேஷன் ரோடு,
கோடம்பாக்கம், சென்னை- 600 024.

போற்றி ! போற்றி!!

எனக்காக, எனக்காகக் கல்வாரிப் போர்தனில்
ஒருவராய், தனியராய் யுத்தஞ் செய்து
இரத்தமும், வியர்வையும் கலந்து ஊற்றி,
மரணத்தின் அதிபதியின் தலைதனை நசுக்கினீரே !

பாவமற என்னைக் கழுவிடவன்றோ?
பரிசுத்த உம்பாதம் சேர்ந்திடவன்றோ?
பரலோக வாசல் திறந்திட வன்றோ?

உன் தன் ஜீவன்தந்து, எந்தன் போர்ஜெயித்த,
என் மீட்பரே, என் இரட்சகா, என் தேவனே,
என் எஜமானே, என் இயேசு இராஜா—

என் முழு உள்ளத்தோடு இச்சிறு நூலினையும்
சமர்ப்பிக்கிறேன்; அர்ப்பணிக்கிறேன்.
ஏற்றுக் கொண்டருளுமே!

பொருளடக்கம்

எண்		பக்கம்
1.	ஆ, என் சகோதரனே ...	5
2.	கிறிஸ்துவின் நாமம் ...	9
3.	கண்ணீர்த் துளிகள் ...	16
4.	வேத வசனத்தின் வல்லமை ...	29
5.	எங்கள் குடும்பம் பெரியது ! ...	34
6.	ஆட்டுக்குட்டியானவரின் இரத்தம் ...	46
7.	அணு ஆயுதங்களும் கிறிஸ்துவின் இரத்தமும் ...	49
8.	பரிசுத்தாவியின் வல்லமை! ...	57
9.	ஒருமனப்பாடு ...	61
10.	உபவாசத்தின் வலிமை! ...	65
11.	திடன் கொள்! பெலப்படு! ...	71
12.	துதிப்போம் வாரீர் ! ...	76
13.	மீண்டும் மனம்விட்டு...! ...	83

ஆ! என் சகோதரனே!

நாம் பெலன் கொள்ள வேண்டிய நேரமிது! நாம்தேவனுக்காக வைராக்கியம் காண்பிக்க வேண்டிய தருணம் இது! போர்க்களத்தின் மத்தியில் நின்றுகொண்டிருக்கும் தேவ பிள்ளையே, இன்று கிறிஸ்தவர்களுக்கு விரோதமாக எல்லாப் பக்கங்களிலும் இடுக்கமும், போராட்டங்களுமே நிறைந்து காணப்படுகின்றன. உனக்குத் தெரியுமா? தேவ பக்தியை நிர்மூலமாக்க, விசுவாசத்தை சிதறடிக்க, ஒரு மனப்பாட்டைத் தகர்க்க சத்துரு மூர்க்கமாய்க் கிரியை செய்து வருவதை நீ அறியாயோ?

ஏனென்றால் இது கடைசி நேரம். காயீன் உள்ளத்தில் கசப்பையும், கோப வெறியையும் விதைத்து, தன் சகோதரனைக் கொலை செய்யத் தூண்டின பிசாசானவன், இன்று உலகத்தாரின் மத்தியிலும் அதே கசப்பையும், கோப வெறியையும் ஆயிரம் மடங்கு விதைத்திருக்கிறான். ஏனெனில் உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம் போல் எவனை விழுங்கலாமோவென்று வகைதேடிச் சுற்றித் திரிகிறான் (I பேதுரு 5:8) என்று வேதம் திட்டமாய் எச்சரிக்கிறது!

ஆ! என் சகோதரனே! எத்தனையோ காலங்களை நாம் நிர்விசாரத்திலும், அசதியிலும், தூக்க மயக்கத்திலும் கழித்து விட்டோம். தேவன் எவ்வளவு கிருபையாய் இதுவரை கிருபையின் வாசல்களை, சுவிசேஷ கதவுகளை நம் தேசத்தில் திறந்து வைத்திருந்தார், வைத்திருக்கிறார்! ஆனால் நமக்குள்ளோ, எத்தனை சண்டைகள், பிரிவினைகள், ஒரு மனமற்ற சபைப் பிரிவுகள்; அன்புத் தாழ்ச்சிகள், ஜாதிப் பிரிவினைகள்!

இயேசுக் கிறிஸ்து சிலுவையிலே இரத்தம் சிந்தி, மரித்து இரண்டாயிரம் ஆண்டுகள் ஆகியும்கூட ஏன் இன்னும் நமது தேசம் சந்திக்கப்படவில்லை? ஏன் கிராமங்கள்தோறும், தெருக்கள்தோறும் தேவனைத் துதித்துப்பாடும் மக்கள் ஆயிரமாயிரமாய் எழும்பவில்லை? ஏன் கொரியாவையும் வேல்ஸ் தேசத்தையும் சந்தித்த எழுப்புதல் நம் தேசத்தை சந்திக்கவில்லை? ஏன் நாம் போர்க்களத்தில் நின்றுகொண்டு தடுமாறிக் கொண்டிருக்கிறோம்?

ஆ! என் சகோதரனே! நம்மை நாமே ஆராய்ந்து பார்த்து செயல்பட வேண்டிய கடைசி தருணமிது! அநேக பிரசங்கங்களைக் கேட்டு அஜீரணமாய் அமர்ந்திருக்கிறோமே தவிர, தேவ வல்லமையை செயல் முறைக்குக் கொண்டு வந்து தேசத்தின் அஸ்திவாரங்களை அசைத்து கர்த்தருக்குச் சொந்தமாக்கவில்லையே?

சகோதரனே, 1979 ஆம் ஆண்டில் மட்டும் கிறிஸ்தவர்களாய் இருந்து உதவித் தொகைகளுக்காகவும், அரசாங்க சலுகைகளுக்காகவும் பிறமதங்களைத் தழுவியவர்களின் எண்ணிக்கை 12,000 திற்கும் மேல். கடந்த 5 ஆண்டுகளில் எத்தனை இயக்கங்கள் புதிது புதிதாக கிறிஸ்தவர்களுக்கு விரோதமாக எழும்பியிருக்கிறது என்பதை அறிவாயா?

போர்க்களத்தில் நீ: —

நீ ஒரு போர்களத்தில் நிற்கிறாய்! ஒவ்வொரு கிறிஸ்தவனும் தன் தன் போராயுதங்களை தரித்துக்கொண்டு அந்தகார ஆவிகளோடு போராட வேண்டிய கடைசி நேரத்தில் இருக்கிறோம். கொஞ்ச நாள் மட்டுமே! ஆம்; இனி காலம் செல்லாது! கிறிஸ்தவனே, நீ இதை உணருகிறாயோ இல்லையோ, ஆனால் உன் எதிராளியான பிசாசானவன் இதை உணர்ந்திருக்கிறபடியால் மிகத் தீவிரமாக முழு மூச்சோடு இரட்சிப்பைச் சுதந்தரித்துக் கொள்ளப் போகிறவர்களுக்கு விரோதமாக யுத்தஞ் செய்து கொண்டு வருகிறான்.

அப். பவுல் எச்சரிக்கிறார். ''துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகாரலோகாதிபதிகளோடும், வான மண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டமுண்டு. (எபேசியர் 6:12), ஆம் நிச்சயமாக போராட்டம் உண்டு!

போர்க்களத்தில் நிற்கும் தேவபிள்ளையே, உன் யுத்தம் மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல; மனிதனோடும் அல்ல· எய்தவனிருக்க அம்பை நொந்து கொள்வானேன்? நமது போர், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடுதான்! உன் போராயுதங்கள் என்ன? உன் சர்வாயுத வர்க்கங்களைத் தரித்துக் கொண்டாயா? உன்னையும் உன்னைச் சுற்றிலுமுள்ளவர்களையும் பாதுகாக்க வேண்டிய நீ, உன் உத்தரவாதத்தை உணர்ந்தாயா?

ஏழு மடங்கு சூடான சூளைகள்:-

யுத்தத்திற்காக உலகம் செலவழிக்கும் தொகை ஒரு நாளைக்கு 660 கோடி ரூபாய்கள். நாம் வாழும் இந்த உலகத்தைப்போல ஏறத்தாழ 40,000 உலகங்களை அழிக்கும் அளவிற்கு அணு ஆயுதங்களை உலக வல்லரசுகள் ஏற்கனவே தயாரித்தது மட்டுமல்லாமல், இப்பொழுது அவற்றைப் பாதுகாக்க முடியாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

கம்யூனிசம் என்ற வலுசர்ப்பம், அநேக நாடுகளை விழுங்கி கிறிஸ்தவர்களை ஏப்பம் விட்டு, ஆலயங்களைத் தகர்த்து, தீவிரமாய் முன்னேறிவருகிறது! நேபுகாத்நேச்சார் அன்று சூளையை ஏழு மடங்கு சூடாக்க உத்தரவு கொடுத்தான். (தானி 3;19), ஆனால் இன்றோ, சூளைகள் ஏழாயிரம் மடங்கு சூடாக்கப்பட்டிருக்கின்றன! சகோதரனே! உன் போராயுதம் என்ன?

நமது போராயுதம் துப்பாக்கி முனையோ, மாம்ச பெலனோ, பணத்திரட்சியோ, அல்லது அதிகாரமோ அல்ல. அப்போஸ்தலகிய பவுல் எழுதுகிறார். "எங்களுடைய போராயுதங்கள் மாம்சத்துக்கேற்றவைகளாயிராமல், அரண்களை நிர்மூலமாக்குகிறதற்குத் தேவ பலமுள்ளவை களாயிருக்கிறது" (II கொரி 10:4).

"அவைகளால் நாங்கள் தர்க்கங்களையும், தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டி மையையும் நிர்மூலமாக்கி, எந்த எண்ணத்தையும் கிறிஸ்து வுக்குக் கீழ்ப்படியச் சிறைபடுத்துகிறோம்." (II கொரி 10:5)

"என் கைகளைப் போருக்கும், என் விரல்களை யுத்தத் திற்கும் படிப்பிக்கிற என் கன்மலையாகிய கர்த்தருக்கு ஸ்தோத்திரம்" (சங்கீதம் 144;1).

என் சகோதரனே! நம் தேவன் பெரியவர்; மகத்துவ முள்ளவர். கல்வாரிச் சிலுவையில் சத்துருவின் தலையை நசுக்கி ஜெயம் கொண்டவர். அவர் ஜெய வேந்தனாய் நமக்கு முன்பு கடந்து செல்கிறார். இஸ்ரவேலின் சேனை களுக்கு முன் நடந்தவர், நமக்கு முன் நடந்து செல்வதால் நாம் வெற்றியை சுதந்தரித்துக் கொள்வோம். "கடைசி யாக சகோதரரே, கர்த்தரிலும் அவர் சத்துவத்தின் வல்ல மையிலும் பலப்படுங்கள்" (எபேசி 6:10).

நம்முடைய கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங் கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்." (I கொரி 15:57).

கர்த்தரின் நாமம்!

பெயருக்கு ஆள் தத்துவம் உண்டு; ஓர் ஆளின் பெயரைச் சொல்லும்போதே அன்னாருடைய குணாதிசயங்கள் நம் மனக்கண்கள் முன் வந்து நிற்கின்றன. பெயருக்கு மரியாதையும் கௌரவமும் உண்டு. நம் நாட்டில் அநேக பெண்கள் தம் கணவரின் பெயலைரச் சொல்லமாட்டார்கள். அவருக்கு தாங்கள் மரியாதை செய்வதால்தான்! பழைய புதிய ஏற்பாட்டு பரிசுத்தவான்களின் பெயர்களில் ஓர் உள் அர்த்தம் பொதிந்திருப்பதைக் காண்கிறோம். தேவன் அந்தந்த பெயருக்கு ஏற்றபடி எடுத்து உபயோகித்து வந்ததையும் அறியலாம்.

1. தேவனுடைய நாமம்:

தேவன் மோசேயை நோக்கி, 'ஆபிரகாமின் தேவனும் ஈசாக்கின் தேவனும், யாக்கோபின் தேவனுமாயிருக்கிற உங்கள் பிதாக்களுடைய தேவனாகிய கர்த்தர் என்னை உங்களிடத்திற்கு அனுப்பினார் என்று நீ இஸ்ரவேல் புத்திரருக்குச் சொல்வாயாக, என்றைக்கும் இதுவே என் நாமம்; தலைமுறை தலைமுறைதோறும் இதுவே என் பேர்ப்பிரஸ்தாபம்! என்றார் (யாத் 3:15).

கர்த்தர் என்றால் இரக்கமும், கிருபையும் நீடிய சாந்தமும் மகா தயையும் சத்தியமுமுள்ள தேவன் என்று அர்த்தம் (யாத் 34:5) அது மட்டுமல்ல, கர்த்தர் என்றால் எரிச்சலுள்ள தேவன் என்றும் பொருள்படும் (யாத் 34:14), ஆகையால் தேவன் தம் நாமம் வீணில் வழங்கப்படுவதை ஒருக்காலும் பொறுத்துக் கொள்ளமாட்டார் (யாத் 20:7, உபாகமம் 5:11).

2. தாவீதின் போர் ஆயுதம்:

கர்த்தருடைய நாமத்தை தன் பேராயுதமாக பயன்படுத்தி வெற்றி கண்ட முதல் இராஜா தாவீதுதான். சிறிய வயதிலேயே வலியவனுன கோலியாத்தை கர்த்தருடைய நாமத்தால் எதிர்த்தான். தாவீது பெலிஸ்தியனை நோக்கி, "நீ பட்டயத்தோடும், ஈட்டியோடும், கேடகத்தோடும் என்னிடத்தில் வருகிருய், நானே, நீ நிந்தித்த இஸ்ரவேலுடைய இராணுவங்களின் தேவனுகிய சேனைகளுடைய கர்த்தரின் நாமத்தில் உன்னிடத்தில் வருகிறேன்," என்ருன் (I சாமு 17:45).

கர்த்தரின் நாமம், தற்பாதுகாப்பு ஆயுதம் மட்டுமல்ல, எதிர்கொண்டு வந்து தாக்கும் தேவபெலனும் கூட! உன்னிடத்தில் வருகிறேன் என்று தாவீது சொல்லும்போது கர்த்தரின் நாமத்தினுல் உண்டாகும் தேவ சமூகம் தாவீதுக்கு முன் சென்றது என்றுதானே அர்த்தம்? கர்த்தரை எப்பொழுதும் என் முன் வைத்திருப்பதால் நான் அசைக்கப்படுவதில்லை என்று தாவீது மார்தட்டி சொல்வதின் இரகசியம் இதுதான். கோலியாத்தை வெற்றி கொண்டது மட்டுமல்ல; தாவீதின் வாழ்நாள் முழுவதும் வெற்றியை சுதந்தரித்துக் கொண்டதின் இரகசியமும் இதுதான்!

3. இயேசுவின் நாமத்தில் ஜெபி!

சென்னையில் ஓர் ஆலயத்தில் புகழ் பெற்ற ஊழியர் ஒருவர் விசேஷ செய்தி கொடுக்கும்படியாக அழைக்கப்பட்டிருந்தார். ஆலயம் நிரம்பி வழிந்தது. எங்கும் மக்கள் வெள்ளம்.

கூட்டம் ஆரம்பித்தது. ஆனுல் ஒலிபெருக்கிகள் சரியாய் வேலை செய்யவில்லை. ஒரே கரகரப்பும், இரைச்சலும் தான்! இடையிடையே "மைக்" வேறு ஓலமிட்ட வண்ணமாயிருந்தது. "இவ்வளவு பெரிய கூட்டத்தை ஒழுங்கு செய்தவர்கள், ஒரு நல்ல ஒலிபெருக்கியைக் கொண்டு வந்-

திருக்கக் கூடாதா?" என்று ஒருவர் முணுமுணுத்தார். அதைத் தொடர்ந்து அநேக முணுமுணுப்பின் சத்தங்கள்; கேலிக் குரல்கள்!

அப்பொழுது ஒரு சகோதரி திடீரென்று முழங்காலில் நின்று, மைக் ஒழுங்காக வேலை செய்யவேண்டும் என்று இயேசு கிறிஸ்துவின் அதிகாரமுள்ள நாமத்தில் ஜெபிக்க ஆரம்பித்தார்கள். இயேசுகிறிஸ்துவின் நாமம், மைக்கின் மேல் கிரியை செய்து கொண்டிருந்த சத்துருவின் வல்லமையை முறித்தது. மைக் மிகத் தெளிவாக வேலை செய்ய ஆரம்பித்துவிட்டது!

நீ முணுமுணுத்தால் சத்துரு உன்னை மேற்கொள்வான்; ஆனால், நீ கிறிஸ்துவின் நாமத்தினால் அவனை எதிர்த்து நின்றால், அவன் ஓடிப்போவான். கிறிஸ்துவின் நாமமே நமது பேராயுதம்.

இயேசு சொன்னார் "என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன்" (யோவான் 14:14) நீங்கள் என் நாமத்தினாலே பிதாவினிடத்தில் கேட்டுக் கொள்வதெதுவோ அதை அவர் உங்களுக்குத் தருவார். (யோ 16:23) எபிரேயரின் ஆக்கியோன் எழுதுகிறார், "ஆகையால் அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திர பலியை அவர் மூலமாய் எப்போதும் தேவனுக்குச் செலுத்தக்கடவோம்." (எபி 13:15) "நீ வெற்றி சிறக்க வேண்டுமானால் இயேசு கிறிஸ்துவின் நாமம் எப்பொழுதும் உன் உதடுகளில் இருக்கட்டும், (ரோம 1:8) (எபே 5:20).

4. முழங்கால்களை முடங்க வைக்கும் நாமம்:-

"இயேசுவின் நாமத்தில் வானோர், பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும் படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசு

கிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கை பண்ணும் படிக்கும் எல்லா நாமத்துக்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார். (பிலி 2:10,11)

முழங்கால் யாவும் முடங்கும்; நாவுகள் யாவும் அறிக்கை பண்ணும்; வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் நமது இரட்சகருக்குக் கொடுக்கப் பட்டிருக்கிறது! ஆ! அவரது நாமம் எவ்வளவு வல்லமையானது! ஆமென், அல் லேலூயா, தேவனைப் பாடி நன்றியோடு துதிப்போமாக!

தேவனற்ற துரைத்தனங்களும், அதிகாரங்களும், தேவ னுடைய மக்களுக்கு விரோதமாய்ப் போராடி அவர்களை மேற்கொள்ள முயற்சிக்கிறது. ஆனால் இயேசு கிறிஸ்து வின் நாமத்தின் பெலத்தால் எவ்வளவு பெரிய அதிகார மாயிருப்பினும் அவற்றுன் முழங்கால்களை முடக்கும் வல்ல மையை தேவன் நமக்குத் தந்திருக்கிறார். அவர் நாமம் தரிக்கப்பட்ட ஜனங்கள் நாமல்லவா? அவர் நாமம் தரிக்கப் பட்ட ஆலயம் நமது ஆத்துமா அல்லவா?

5. மூலதனமும் முதலீடும் அவரது நாமமே!

பேதுரு தனது ஊழியத்தை ஆரம்பிக்கிறார்; அவரிடம் படிப்போ, சர்டிபிக்கட்டோ, ஒன்றும் இல்லை. பொன்னோ, வெள்ளியோ இல்லை. மக்கள் ஆதரவோ, அரசாங்க உதவியோ இல்லை. ஆனால் எல்லாவற்றிற்கும் மேலான ஒன்று அவரிடமிருந்தது. அவரது முதலீடும், மூலதனமும் இயேசு கிறிஸ்துவின் நாமமே! அல்லேலூயா!

ஆலய வாசலில் அமர்ந்திருந்த பிறவிச் சப்பாணியைப் பார்த்து பேதுரு சொன்னார்; வெள்ளியும், பொன்னும் என் னிடத்திலில்லை; என்னிடத்திலுள்ளதை உனக்குத் தருகி றேன். ''நசரேயனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் எழுந்து நட" என்று சொல்லி, வலது கையினால் அவனைப் பிடித்துத் தூக்கிவிட்டான். உடனே அவனுடைய கால் களும் கரடுகளும் பெலன் கொண்டன. (அப் 3:6-8)

அன்று பிறவிச்சப்பாணியின் முடத்தை நீக்கின அவரதுநாமம், இன்று உனது எல்லா பெலவீனங்களோடும், வியாதிகளோடும் போரிட்டு உன்னையும் நிச்சயமாக குண மாக்கவல்லது! ஆமென்!

அப்போஸ்தலன் பேதுரு அதை வற்புறுத்திச் சொல்கிறார் ''அவருடைய நாமத்தைப் பற்றும் விசுவாசத்தினாலே அவரு டைய நாமமே நீங்கள் பார்த்து அறிந்திருக்கிற இவனைப் பெலப் படுத்திற்று" (அப் 3: 16).

இயேசுவின் நாமத்தினால் வியாதிகளைக் கடிந்து கொள் நோய்கள் குணமாகும். இயேசுவின் நாமத்தினால் பிசாசு களைக் கடிந்துகொள். அவைகள் பறந்தோடிப்போகும். இயே சுவின் நாமத்தினால் இயற்கைக்குக்கட்டளையிடு: தேவன் உன் வாக்கை நிறைவேற்றுவார்.

உனக்கு விரோதமாய் எழும்பும் உன் சத்துருக்களைக் கர்த்தர் உனக்கு முன்பாக முறிய அடிக்கும்படி ஒப்புக் கொடுப்பார்; ஒருவழியாய் உனக்கு எதிராக புறப்பட்டு வருவார்கள்; ஏழு வழியாக உனக்கு முன்பாக ஓடிப்போ வார்கள்.

6. எதைச் செய்தாலும் கிறிஸ்துவின் நாமத்தில் செய்!

''வார்த்தையினாலாவது, கிரியையினாலாவது, நீங்கள் எதைச் செய்தாலும், அதையெல்லாம் கர்த்தராகிய இயேசு வின் நாமத்திலே செய்து, அவர் முன்னிலையாகப் பிதா வாகிய தேவனை ஸ்தோத்தரியுங்கள்'' (கொலே 3; 17)

அப்போஸ்தவனாகிய பவுல் நமக்குக் கற்பிக்கும் வெற்றி யின் இரகசியம் இதுதான். எப்பொழுதும் அவர் நாமம் உன் உள்ளத்திலும், உதட்டிலும், வாழ்க்கையிலும் இருக் கட்டும்.

D. L. மூடியைப் பற்றி ஒரு பக்தன், "D. L, மூடி 280 பவுண்ட் எடையுள்ள பெரிய மனிதனுயிருந்தும், அவரது சரீரத்தின் ஒவ்வொரு அவுண்ஸ் சதையும் முற்றிலுமாக இயேசு கிறிஸ்துவின் நாமத்தோடு இணைந்திருந்தது. ஆதலால்தான் ஐரோப்பாக் கண்டத்தை ஒருகையிலும், அமெரிக்கா கண்டத்தை மறுகையிலும் உலுக்கி, கர்த்தருடைய சிங்காசனத்திற்கு முன் ஏந்திக் கொடுக்கும் மாபெரும் பெலமுள்ளவராயிருந்தார்' என்று குறிப்பிடுகிறார். ஆம் இயேசுவின் நாமம் அவரது ஆவி, ஆத்துமா சரீரத்தோடு முழுவதுமாக இரண்டறக் கலந்திருந்தது.

''என்னிடத்திலுள்ளதை உனக்குத் தருகிறேன்!" என்று அதிகாரத்தோடு அவர் பிரசங்கித்து, கிறிஸ்துவின் நாமத்தை லட்சக்கணக்கானவர்களின் உள்ளத்தில் வெற்றியோடு விதைத்தார்!

7. போராட்ட நேரங்களில்:-

ரிச்சர்ட் உம்பிராண்ட் ஏறத்தாழ 14 ஆண்டுகள் சிறையில் சித்திரவதைகளை அனுபவிக்க நேரிட்டது. ''மிகுந்த பசியிலும், உறக்கமில்லாத நிலையிலும், மயக்கமான நிலையிலும் எங்களைப் பாதுகாத்துக் கொண்டு வந்தது கிறிஸ்துவின் நாமமே. இச்சைகளைத் தூண்டி விடும் மருந்துகளையும், போதை தரும் மருந்துகளையும் நாங்கள் கட்டாயமாக உட்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் வந்த போதும், மூளையைக் கலக்கும் இயந்திரத்தோடு எங்கள் தலைகள் பொருத்தப்பட்ட போதும், இயேசுவின் நாமத்தை நாங்கள் எங்கள் மூச்சோடும் இருதயத் துடிப்போடும் இணைத்திருந்தபடியாலே நாங்கள் வெற்றி பெற்றோம்" என்று எழுதுகிறார். சத்துருவின் போராயுதங்களை முறியடிக்கும் தெய்வீக பெலனை இயேசுவின் நாமம் எங்களுக்கு ஊட்டிக் கொண்டே இருந்தது என்று குறிப்பிடுகிறார். ''கர்த்தரின் நாமம் பலத்த துருகம்; நீதிமான் அதற்குள் ஓடி சுகமாய் இருப்பான்." நீதி 18:10.

இயேசு கிறிஸ்து பரலோகத்திற்கு செல்லுமுன் நமக்குத் தந்த மாபெரும் வாக்கு என்ன?

''என் நாமத்தினாலே பிசாசுக்களைத் துரத்துவார்கள்; நவமான பாஷைகளைப் பேசுவார்கள்; சர்ப்பங்களை எடுப்பார்கள்; சாவுக்கேதுவான யாதொன்றைக் குடித்தாலும் அது அவர்களைச் சேதப்படுத்தாது. வியாதியஸ்தர் மேல் கைகளை வைப்பார்கள். அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள்." (மாற்கு 16:17,18)

ஆம்; இயேசு என்னும் நாமம்; வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமுள்ள நாமம் (மத் 28:18)

இயேசு என்னும் நாமம் எதைக் கேட்டாலும் நமக்குப் பெற்றுத்தரும் நாமம் (யோவான் 14:14)

''நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்'' (1கொ 15:57)

இயேசு என்ற திருநாமத்திற்கு எப்பொழுதுமே மிக ஸ்தோத்திரம்! அல்லேலூயா!

கண்ணீரின் பெருந்துளிகள்

கண்ணீரைக் குறித்து வேடிக்கையான கதையொன்று உண்டு. ஓர் ஊரில் முதியவர் ஒருவர் இருந்தார். உறவின ரோ, நண்பர்களோ யாரும் அவருக்கு இல்லாததால் தனி மையில் வாடி, தன்னைத்தான் நொந்து கொண்டு, கவலை தாங்கமாட்டாமல் அழுது கொண்டே இருந்தார். அவரை ஆறுதல் படுத்தவோ கண்ணீரைத் துடைக்கவோ ஒருவரும் இல்லை. தேம்பித் தேம்பி அழுத அவர் கண்களிலிருந்து கண்ணீர் ஆறுக ஓடி, அவரைச் சுற்றிலும் ஒரு கண்ணீர் ஏரியே உருவாகிவிட்டது.

இந்தக் கண்ணீர் ஏரியைக் கண்ட வானத்துப் பறவை கள், அது ஒரு குளம் என்று எண்ணி வந்து, ஏரியில் குளித்து மகிழ்ந்தன. அந்தக் கண்ணீர்—ஏரியைச் சுற்றிலும் புதிய அழகிய மலர்கள் மலர்ந்து மணம் வீசின. மீன்கள் துள்ளி விளையாடின. எங்கும் மகிழ்ச்சி, குதூகலம், பறவைகளின் பாடல்கள்.

பல வருடங்கள் தொடர்ந்து அழுது கொண்டிருந்த அந்த முதியவர், ஒருநாள் தன் கண்களைத் திறந்தார். தன்னைச் சுற்றிலும் இருக்கும் ஏரியையும் அதில் விளையாடும் பறவைகளையும், வண்ணத்துப் பூச்சிகளையும் கண்டார், மகிழ்ந்தார். அவரது கண்ணீர் நின்று போயிற்று.

கண்ணீர் நின்றதால் ஏரி வற்ற! ஆரம்பித்தது. மீன்கள் துடித்தன. பறவைகளும் வேதனையுற்றன. கண்ணீர் ஏரியில் வாழ்ந்த எல்லா ஜீவராசிகளும், தவளை, நண்டு இனங்

களும் பெரியவரிடம் வந்தன. 'ஐயா, நீங்கள் கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தால் மட்டுமே நாங்கள் உயிர் வாழ முடியும்,' என்று வேண்டிக் கொண்டன.

பெரியவர் என்ன செய்வார்? பாவம், கண்களை மூடினார். கண்ணீர் சொரிய ஆரம்பித்தார். அவர் கண்ணீரின் ஒத்தாசையால் ஆயிரமாயிரம் உயிரினங்கள் மனம் மகிழ்ந்து பாடின. ஒருவருடைய கண்ணீரின் ஜெபத்தால் ஏராளமானவர்கள் நன்மை பெற்றுக் கொள்கிறார்கள் என்று இந்தக் கதை அழகாக நமக்கு விளக்கிக் காட்டுகிறதன்றோ?

2. ஆத்தும நேசரின் கண்ணீர்:

நமக்காக கிறிஸ்து வாக்குக் கடங்காத பெருமூச்சோடு விண்ணப்பம் பண்ணினார். இரத்த வியர்வையோடு கண்ணீரும் சிந்தினார். கண்ணீரின் ஜெபம் எத்தனை ஆசீர்வாதங்களைப் பெற்றுத் தரும் என்று நமக்குக் கற்பித்தவர் நமது ஆத்தும நேசரல்லவா? மரணத்தின் அகோரப் பிடியைத் தன் கண்ணீரினால் தளர்த்தி, மரணக்கட்டுகளை முறித்து லாசருவை விடுவித்தார். "இயேசு கண்ணீர் விட்டார்" (யோவான் 11:35) இது சிறிய வசனமாயிருந்தாலும் அதின் வலிமை எவ்வளவு பெரியது தெரியுமா? அவரது கண்ணீரால் உயிர் பெற்று, துள்ளி எழுந்த லாசரு, எவ்வளவு பெரிய சாட்சியாய் மாறினார்! அக்கிரமத்திலும் பாவங்களிலும் மரித்த உன்னையும் கூட மீட்டெடுக்க கிறிஸ்துவின் கண்ணீர் இன்றும் ஆறாய் ஓடிக் கொண்டிருக்கிறது. கண்ணீர் ததும்பி நிற்கும் உன் ஆத்தும நேசரின் கண்களை ஏறெடுத்துப்பார்!

எருசலேமைக் கண்ட போது மனதுருக்கமுள்ள நமது நேசரின் கண்கள் கண்ணீர்க் குளமாயிற்று. அவர் சமீபமாய் வந்தபோது நகரத்தைப் பார்த்து, அதற்காகக் கண்ணீர் விட்டழுது, உனக்குக் கிடைத்திருக்கிற இந்த நாளிலாகிலும், உன் சமாதானத்துக்கு ஏற்றவைகளை நீ

அறிந்திருந்தாயானால் நலமாயிருக்கும். இப்பொழுதோ, அவைகள் உன் கண்களுக்கு மறைவாயிருக்கிறது." என்றார் (லூக்கா 19:41,42) ஆ! நம்முடைய நேசரோடு கூட சேர்ந்து நாமும் நமது தேசத்திற்காக அழுவோம்! எத்தனை வெளிநாட்டு மிஷனெரிகள் தங்கள் இரத்தத்தையும், கண்ணீரையும் சிந்தி தங்கள் வாழ்நாளெல்லாம் நம் தேசத்தில் ஊழியஞ் செய்தும், நம் தேசம் முழுமையும் இன்னும் இரட்சிக்கப் படவில்லையே! இயேசுவின் வருகையோ நெருங்கிவிட்டதே! நகரத்தின் சகல அருவருப்புகளினிமித்தம் பெருமூச்சு விட்டு அழும் ஜெப வீரர்களை தேவன் முத்திரையிட்டு வருகிறார். எபிரேயர் 5:7 இவ்விதமாய்ச் சொல்கிறது: "அவர் மாம்சத்திலிருந்த நாட்களில் தம்மை மரணத்தினின்று இரட்சிக்க வல்லமையுள்ளவரை நோக்கி, பலத்த சத்தத்தோடும், கண்ணீரோடும் விண்ணப்பம் பண்ணி, வேண்டுதல் செய்து, தமக்கு உண்டான பயபக்தியினிமித்தம் கேட்கப்பட்டு..."

இயேசுவின் சாயலை தியானித்துப்பார். "அவர் துக்கம் நிறைந்தவர் "Man of Sorrows" "புறக்கணிக்கப்பட்டவர்" "அசட்டை பண்ணப்பட்டவர்" "அந்தக் கேடடைந்தவர்" "சிறுமைப்பட்டவர்" காயப்பட்டவர், நொறுக்கப் பட்டவர். (ஏசாயா 53: 3,4,5,) ஆ! அவரது கண்கள், கண்ணீர் ததும்பிக் கொண்டிருக்கும் புறாக் கண்கள். இரவும் பகலும் நமக்காக கண்ணீர் சொரிந்து கொண்டிருக்கும் பாசக்கண்கள். அவரே நமது ஆத்தும நேசர், நமது முன் மாதிரி. நமது கண்ணீரின் ஜெபத்தைக் கேட்டு, துரிதமாய் வந்து நம்மைத் தேற்றுகிறவர்; நமது கண்ணீரைத் துடைப்பவர்!

3. வெள்ளைப் போளமும் கண்ணீரும்:-

ஜெபத்துக்கு நிழலாட்டமாய் பழைய ஏற்பாட்டிலிருக்கும் தூபவர்க்கத்திலுள்ள முக்கியப்பொருள் என்ன தெரியுமா?

வெள்ளைப போளம் தான். வெள்ளைப்போள மரத்தைக் கூரிய கத்தியால் சீவுகிறார்கள். வெட்டப்பட்டு குத்தப்பட்ட இடத்திருந்து பிசினாக வெள்ளைப்போளம் வடிகிறது. வெள்ளைப்போளம் கசப்பானது, மென்மையானது, ஆனால் வாசனையானது. நொறுங்குண்ட இருதயத்திலிருந்து பீறிட்டு எழும் கண்ணீரின் ஜெபத்திற்கு இந்த வெள்ளைப் போளம் அடையாளமாய் இருக்கிறது.

ஆம்; அன்னாள் மனங்கசந்து அழுதாள்; (I சாமு 1:10) ஏனெனில் அவள் கர்ப்பம் அடைக்கப் பட்டிருந்தபடியால், அவளுடைய சக்களத்தி அவள் துக்கப்படும்படியாக அவளை மிகவும் விசனப்படுத்துவாள். தன் கவலையைக் கொட்ட, தன் வியாகுலங்களை மனம்விட்டுச் சொல்லி அழ அன்னாள் கர்த்தருடைய பாதத்தையே தெரிந்து கொண்டாள். ஆலயத்திற்குள் ஓடினாள் 'அவள் போய் மனங்கசந்து மிகவும் அழுது கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணினாள்' என்று வேதம் சொல்கிறது.

வெற்றி அன்னாளுக்குத் தான். நிந்தையையும், அவமானத்தையும் தன் கண்ணீரால் தகர்த்தெறிந்தாள் அன்னாள்! கர்த்தரின் பாதத்தில் சிந்தும் கண்ணீர் அவளது ஆசீர்வாத ஆயுதமாயிருக்க அவள் ஏன் மலடியாய், வாழ்க்கையில் தோல்வியுற்றவளாய் இருக்கவேண்டும்? அந்தக்கண்ணீரின் ஜெபம் அவளுக்கு சாமுவேலைப் பெற்றுத் தந்தது மட்டுமல்ல; இன்னும் ஐந்து குழந்தைகளைப் பெற்றுத்தரும் பாக்கியத்தையும் தந்தது!

ஊழியத்தில் நீ மலடியாய்—வரங்களற்ற மலடியாய் ஆத்துமாக்காக்கள் கிடைக்காத மலடியாய்—தேவ ஆசீர்வாதமும், வருமானமும் தங்காத மலடியாய் நீ தள்ளாடுகிறாயா? காரணமென்ன என்று தேவ சமூகத்தில் நீ ஆராய்ந்தால் கண்ணீரற்ற ஜெபமே என்று ஆவியானவர் உணர்த்துவார். கண்ணீரற்ற ஜெபம் கனியற்ற ஜெபம், எனவே கண்ணீரோடு ஜெபிக்க தீர்மானஞ் செய்வோம்.

4. கண்ணீரை முயற்சித்துப்பார்:-

தன் ஊழியத்தில் தோல்வியடைந்த மிஷனரி, தன் தாய் நாடு திரும்ப விரும்பினார். அவரை ஊழியத்திற்கு அனுப்பியவர்கள் அவருக்கு ஒரு தந்தி ஒன்றை அனுப்பினார்கள் "TRY TEARS"— கண்ணீரை முயற்சித்துப்பார் என்பதே அந்த செய்தி. அன்று முதல் கண்ணீரோடு ஜெபிக்கவும் கண்ணீரோடு ஊழியஞ் செய்யவும் கற்றுக் கொண்டார். அதிகாலையில் எழுந்ததும் இரண்டு சொட்டு கண்ணீராவது கர்த்தருடைய பாதத்தில் சிந்தாமல் அவர் சென்றதில்லை. கண்ணீரின் போராயுதம் அவருக்கு ஆயிரமாயிரம் ஆத்துமாக்களைப் பெற்றுத் தந்தது.

ஆம்; தேவனுடைய பிள்ளையே, நீ கண்ணீரின் ஆயுதத்தை உபயோகித்ததுண்டா? கணவன் மனைவிக்கிடையே சமாதானமில்லாமல் தவிக்கிறாயா? கண்ணீரை முயற்சித்துப் பார்! உன் பிள்ளைகள் இரட்சிக்கப்படவில்லையே என்று வேதனைப்படுகிறாயா? கண்ணீரை முயற்சித்துப்பார்! விடமுடியாத பாவங்கள் உன்னை மேற்கொள்கின்றனவா? கண்ணீரை முயற்சித்துப்பார்! உன் கவலைகளை, அந்தரங்கங்களை ஊராரிடம் சொல்லித்திரியாதே! கண்ணீரோடு உன் தேவனுக்குத் தெரியப்படுத்து. கட்டாயமாக அவர் ஓடிவந்து உனக்கு உதவி செய்வார். நிச்சயமாய் உன் கண்ணீரைத்துடைப்பார்!

எழுப்புதல் நதி எங்கே ஆரம்பிக்கிறது? அந்தரங்கத்தில் இருதயத்தைக் கிழித்து சிந்தும் கண்ணீர்த் துளிகளில் தான் ஆரம்பிக்கிறது! திருச்சபையின் எழுப்புதல் சரித்திரங்களை' வேல்ஸ் தேசத்துப் பின்மாரியை, கொரியாவில் பற்றிப்பிடித்த எழுப்புதல் அக்கினியை, இந்தோனீஷிய அசைவை சிந்தித்துப்பார். பின்னணியில் எல்லாம் கண்ணீர்த் துளிகள் நிரம்பி இருப்பதைக் காணலாம்!

கொரியாவின் பெரியசபை ஒன்றில், ஒரு சகோதரி மாதக் கணக்கில் முழங்காலில் நின்று, கண்ணீர் சிந்திக் கொண்டிருக்கிறார்களாம். அவர்களுக்கு உணவு முழங்காலிலேயே ஊட்டப்படுகிறது. 'கிறிஸ்துவின் வருகை பரியந்தம் நான் ஆத்துமாக்களுக்காக அழுது கொண்டிருப்பேன்,' என்கிறார்களாம். ''பகல் குளிர்ச்சியாகி நிழல் சாய்ந்து போகுமட்டும் நான் வெள்ளைப்போள மலையிலும், சாம்பிராணி மலையிலும் போயிருப்பேன்'' (உன் 4:6.) அந்த ஒருசகோதரியின் கண்ணீரின் ஜெபத்தைக் காண்கிறவர்கள், தங்களை அறியாமல் முழங்காற்படியிடுகிறார்கள், தாங்களும் கண்ணீர் ஜெப வீரர்களாக மாறுகிறார்கள். நாமும் கண்ணீர் தீர்க்கதரிசியான எரேமியா போல் மாறுவோமா? ''ஆ; என் தலை தண்ணீரும் என் கண்கள் கண்ணீரூற்றுமானால் நலமாயிருக்கும்; அப்பொழுது என் ஜனமாகிய குமாரத்தி கொலையுண்ணக் கொடுத்தவர்கள் நிமித்தம் நான் இரவும் பகலும் அழுவேன்.'' (எரேமியா 9:1) தேவனே, எரேமியாவின் கண்ணீர்க் கண்களை, எங்களுக்குத்தாரும். உமது மனதுருக்கம் எங்கள் இருதயத்தை நிரப்பட்டும். 'கல்வாரி அன்பு, கண்ணீரோடு ஜெபிக்க எங்களை நெருக்கி ஏவட்டும்; என்று ஜெபிப்போமா?

5. கண்ணீரின் பலாத்காரம்!

அணு ஆயுதங்களுக்கு இல்லாத மாபெரும் வல்லமை கண்ணீரின் ஜெபத்துக்கு உண்டு என்பதை தேவனுடைய பிள்ளையே, நீ மறந்து போகாதே! ஒரு நாள் யாக்கோபுக்கு தன் அண்ணனைப் பற்றிய பயம் வந்தது. தன் மனைவி மக்கள், ஆடுமாடுகள் எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு தன்னையும் தன்னோடிருப்பவர்களையும் முறிய அடிப்பான் என்று நடுங்கினான். எனவே, தன்னைவிட பலத்த, செல்வாக்குள்ள கோபக்காரனான தன் அண்ணனைச் சந்திக்குமுன் முழு இரவையும் கண்ணீரின் ஜெபத்தில் செலவழிக்க தீர்மானித்தான். ஏசாவைப்பற்றிய பயம்; தன் எதிர்காலத்தைப் பற்றிய கலக்கம்; தன் மனைவி பிள்ளைகள், ஆடுமாடுகள் பற்றிய

பொறுப்பு அவனை ஜெபவீரனாக மாற்றிவிட்டது. "தன் பெலத்தினால் தேவனோடே போராடினான்; அவன் தூதனானவரோடே போராடி மேற்கொண்டான். அழுது அவரை நோக்கிக் கெஞ்சினான்." (ஓசியா 12:3,4)

ஆம், "அழுது அவரை நோக்கிக் கெஞ்சினான்!" என்று வேதம் சொல்லுகிறது. தேவன் அவன் கண்ணீரைக் கண்டார். அவர் கண்ணீரைப் புறக்கணித்துவிட்டுக் கடந்து செல்கிறவரல்ல. யாக்கோபின் கண்ணீர் தேவனை உருக்கிற்று. அவனை ஆசீர்வதிக்கவே அவர் ஆசீர்வதித்தார். (ஆதி 32:26) சகோதரனை சமாதானத்தோடு சந்திக்க கிருபை செய்தார்.

ஆசீர்வாதங்களை, ஆவியின் வரங்களை கண்ணீர் ஆயுதத்தாலேயே பெற்றுக் கொள்ள முடியும். "தேவனுடைய ராஜ்ஜியம் பலவந்தம் பண்ணப்படுகிறது. பலவந்தம் பண்ணுகிறவன் அதைப் பிடித்துக் கொள்கிறான்." அல்லேலூயா!

தேவனுடைய பிள்ளையே, உன்னை எதிர்த்து அநேகம் பேர் புறப்பட்டு வருகிறார்களா? காரணமில்லாமல் உன்னைப் பகைக்கிறார்களா? உன்னைப் பயமுறுத்தி அவதூறாய்ப் பேசுகிறார்களா? யாக்கோபின் கண்ணீரை நினைத்துக் கொள். யாக்கோபின் தேவன் நமது தேவன். உன் கண்ணீரையும் நிச்சயமாய்த் துடைத்து, உனக்காக வழக்காடுவார். யுத்தம் செய்வார். விடுவிப்பார்; உயர்ந்த அடைக்கலத்தில் வைத்தருளுவார். ஆமென்.

6. கண்ணீர் விதைகள்:-

Dr. T.A. டாரி கீழ்க்கண்ட நிகழ்ச்சியை எழுதுகிறார்:-

"எனக்கு ஓர் ஊழியரைத் தெரியும். அவரது பெயர் கலோனல் கிளார்க். ஒவ்வொரு நாளும் தான் வேலைக்குப் போய்த் திரும்பி வந்ததும், ஊரின் எல்லையில் உள்ள சமூகக் கூடத்தை வாடகைக்கு எடுத்துக் கூட்டம் நடத்துவார்.

ஒவ்வொரு நாளும் குடிகாரர், திருடர்கள், ரவுடிகள், சூதாட்டக்காரர் கண்ணீரோடு கிறிஸ்துவுக்கு ஒப்புக் கொடுப்பதுண்டு. அவரது பிரசங்கம் உப்புச் சப்பில்லாமல் மிகச் சாதாரணமாயிருந்தும் கூட, முடிவில் ஆவியானவரின் வல்லமையான கிரியை காணப்படும். காரணமென்ன தெரியுமா? அழும் அவரது கண்களே! அந்தரங்கத்தில் அழுவார், ஜெபத்தில் அழுவார், பிரசங்கத்தில் அழுவார்; ஆத்துமாக்களுக்கு தரும் ஆலோசனையிலும் அழுவார்.

ஆரம்பத்தில், தான் கண்ணீர் விடுவது தனக்கு அவமானம் என்று தன் கண்ணீரை அடக்கி வைக்க முயற்சித்தாராம். ஆனால் அந்த நாட்களில் ஆவியானவர் கிரியை இல்லை; கூட்டங்கள் மிக தோல்வியடைந்தன. அன்று இரவே 'தேவனே, கண்ணீர் ஆவியை எனக்குத் தாரும்' என்று கதறி அழுதார்; நொறுங்குண்ட இருதயத்தையும், விண்ணப்பத்தின் ஆவியையும், கண்ணீரின் மன்றாட்டையும் பெற்றுக் கொண்டார்.

கண்ணீர் அவமான சின்னமல்ல; அது தேவ பெலத்தின் சின்னம்; கிறிஸ்துவின் முன் மாதிரி சின்னம். அதுவே நமது வெற்றியின் சின்னம்! கர்த்தருடைய வார்த்தை சொல்கிறது ''கண்ணீரோடே விதைக்கிறவர்கள் கெம்பீரத்தோடே அறுப்பார்கள். அள்ளித் தூவும் விதையைச் சுமக்கிறவன் அழுது கொண்டு போகிறான்; ஆனாலும் தான் அறுத்த அரிகளைச் சுமந்து கொண்டு கெம்பீரத்தோடே திரும்பி வருவான்" (சங் 126:5,6)

''அழிவுள்ளதாய் விதைக்கப்படும்; அழிவில்லாததாய் எழுந்திருக்கும்; கனவீனமுள்ளதாய் விதைக்கப்படும்; மகிமையுள்ளதாய் எழுந்திருக்கும், பலவீனமுள்ளதாய் விதைக்கப்படும்; பலமுள்ளதாய் எழுந்திருக்கும்" (I கொரி 1_:43) ஆம்; கண்ணீர் விதைகளை தேவ சமூகத்தில் ஊன்றிவிடு; கண்ணீர் விதைகள் இருளையும் அந்தகாரத்தையும் தோல்வியையும் நீக்கி, மகிமையை விளையச் செய்யும்; தேவசாயலில் உன்னை

மலரச் செய்யும்; திரட்சியான கனியின் ஜீவியத்தைப் பெற்றுத் தரும். ஆமென்; அல்லேலூயா!

7. கண்ணீர்த் துருத்திகள்:-

கண்ணீர்த் துளிகளில் எல்லா நாட்டு மக்களுக்கும் நம்பிக்கை உண்டு. யாராவது இறந்து போனால் எல்லாரும் கூடி அழுகிறார்கள். ஒரு புட்டியில் அழுகிற எல்லாருடைய கண்ணீரும் சேகரிக்கப்படுகிறது. மிகுந்த பயபக்தியோடு கூட, மரித்தவர்களின் பிரேதப் பெட்டியில் அந்த கண்ணீர்ப் புட்டியை வைக்கிறார்கள். அந்தக் கண்ணீர்த் துளிகள் மோட்ச வாசலைத் திறக்கும் வல்லமையுள்ளதென்று பல நாடுகளிலுள்ள மக்கள் நம்புகிறார்கள்.

வேறு சில நாடுகளில், மிக நோய்வாய்ப்பட்டு, வைத்தியரால் கைவிடப்பட்டு மரணத் தருவாயிலிருக்கும் நோயாளிக்கு, நெருங்கிய உறவினர்களின் கண்ணீர்த் துளிகளை கடைசி மருந்தாக வாயில் ஊற்றுகிறார்கள். அந்தக் கண்ணீரைக் கண்டாவது இறைவன் மனதிரங்கி சுகப்படுத்தமாட்டாரா என்று ஏங்குகிறார்கள்.

அன்று ஆகார் சத்தமிட்டு அழுதாள். மிக செல்வந்தனான அவள் கணவன் அவளை வழிவிட்டனுப்பும் பொழுது கொடுத்தனுப்பியது, அப்பமும் ஒரு துருத்தி தண்ணீரும் தான். இவ்வளவுதான் கணவனின் பாசம். தண்ணீர் தீர்ந்தது. மகன் மரணத்தோடு போராடுகிறான், என்ன செய்வது? ஆகார் சத்தமிட்டு அழுதாள். அந்தக் கண்ணீர் தேவதூதனைக் கீழே இறக்கிற்று. தண்ணீர்த் துரவைக் கண்டாள். வாக்குத்தத்தத்தையும் பெற்றுக் கொண்டாள். (ஆதி 21:16). கைவிடப்பட்ட ஆகாரே, கண்ணீரை முயற்சித்துப்பார்.

தாவீது, "என் கண்ணீரை உம்முடைய துருத்தியில் வையும். அவைகள் உம்முடைய கணக்கில் அல்லவோ இருக்

கிறது" (சங் 56:8) என்று எழுதுகிறார். I சாமு 30:4ல் ''தாவீதும், அவனோடிருந்த ஜனங்களும், அழுகிறதற்குத் தங்களில் பெலனில்லாமற் போகுமட்டும் சத்தமிட்டு அழு தார்கள்" என்று வாசிக்கிறோம். ஆம் தங்கள் பெலனையெல் லாம் கண்ணீராய் மாற்றி, தேவ சமூகத்தில் ஊற்றி, தேவ பெலத்தைத் தரித்துக் கொண்டார்கள். வெற்றியின்மேல் வெற்றி தாவீதுக்குக் கிடைத்தது.

தேவனுடைய பிள்ளையே, உன் கண்ணீரின் ஜெப மென்ன?

8. அழுகையின் பள்ளத்தாக்கு:—

உலகத்தில் உபத்திரவம் உண்டுதான்; பாடுகளும் உண்டு. ஆனாலும் தேவனுடைய பிள்ளைகள் அழுகையின் பள்ளத்தாக்கை உருவ நடந்து அதை நீரூற்றுக்கிக் கொள் கிறார்கள். தேவனுடைய பிள்ளையே, கண்ணீரின் பாதை புதியதல்ல; உனக்குமுன் எத்தனையோ பழைய ஏற்பாட்டு புதிய ஏற்பாட்டு பரிசுத்தவான்களும், கிறிஸ்துவும் அந்த பாதையில் நடந்து சென்றிருக்கிறார்கள். யோபு எழுதுகிறார்; ''என் சிநேகிதர் என்னைப் பரியாசம் பண்ணுகிறார்கள். என் கண் தேவனை நோக்கிக் கண்ணீர் சொரிகிறது; (யோபு16:20) தாவீதின் அனுபவம் அதுதான். ''என் பெருமூச்சினால் இளைத் துப்போனேன்; இரா முழுவதும் என் கண்ணீரால் என் படுக் கையை மிகவும் ஈரமாக்கி, என் கட்டிலை நனைக்கிறேன்.'' (சங் 6:6) 'இரவும் பகலும் என் கண்ணீரே எனக்கு உணவா யிற்று. (சங் 42:3). அப் பவுல் சொல்கிறார். ''நான் மூன்று வருஷ காலமாய் இரவும் பகலும் கண்ணீரோடே இடை விடாமல் அவனவனுக்குப் புத்தி சொல்லிக் கொண்டு வந்ததை நினைத்து விழித்திருங்கள்." (அப் 20:31.) ஆகார் (ஆதி 21:16) ஏசா (ஆதி 27:38) யாக்கோபு (ஆதி 37:35) யோசேப்பு (43:30) மோசே (யாத் 2:6), தேவ மனுஷன் (IIராஜா 8:11). இதே அழுகையின் பாதையில்

நடந்தார்கள். அழுகிறவர்களோடே அழுங்கள் என்பது பவுலின் ஆலோசனை (ரோமர் 12:15)

ஆனால் இந்தக் கண்ணீர் வாழ்க்கையின் முடிவு என்ன? நூற்றுக்கு நூறு வெற்றியும் ஜெயமும்தான். சாயங்காலத்தில் அழுகை தங்கும்; விடியற்காலத்தில் களிப்புண்டாகும். (சங் 30:5) அல்லேலூயா! ஒவ்வொரு முறையும் தேவன் கண்ணீரைக் கண்டு பதிலளித்தார்.

எசேக்கியா ராஜா தன் முகத்தை சுவர் பக்கமாகத் திருப்பி கர்த்தரை நோக்கி மிகவும் அழுது விண்ணப்பம் பண்ணினான். மறு விநாடியே, தேவன் ஏசாயாவின் மூலம் பேசினார். "உன் விண்ணப்பத்தைக் கேட்டேன். உன் கண்ணீரைக் கண்டேன்; இதோ, நான் உன்னைக் குணமாக்குவேன்; மூன்றும் நாளிலே நீ கர்த்தருடைய ஆலயத்துக்குப் போவாய். உன் நாட்களோடே பதினைந்து வருஷங்களைக் கூட்டுவேன்." (IIராஜா 20:5) (ஏசாயா 38:5)

இயேசு சொன்னார். "இப்பொழுது அழுகிற நீங்கள் பாக்கியவான்கள்; இனி நகைப்பீர்கள்." (லூக் 6:21) ஆம்; தேவ பிள்ளையே, இயேசு கிறிஸ்துவின் அன்பின் கரம் உன்னைத் தொட்டு உன் கண்ணீரைத் துடைக்கும் வரை அவரை விடாமற் பற்றிக் கொள். கர்த்தருடைய பாதத்தைத் கண்ணீரால் நனைத்து அவரது பாதங்களைத் தன் தலைமயிரினால் துடைத்த மரியாளைப்போல அவரது பாதத்தில் உன் உள்ளத்தை ஊற்றிவிடு. அவர் பொற்கரத்தால் உன் கண்ணீர் யாவையும் துடைப்பார்!

9. ஏன் அழுகிறாய்? யாரைத் தேடுகிறாய்?

ஓர் ஏழை விதவை தன் ஒரே மகனையும் மரணத்தில் இழந்துவிட்டாள். தன் நம்பிக்கை, எதிர்காலம் எல்லாம் போய்விட்டபடியால் துடித்துத் துடித்து மனங்கசந்து அழுதாள். ஒவ்வொரு நாளும் ஜன்னல் அருகே உட்கார்ந்து மரித்த தன் மகன் எழுந்து வந்துவிடமாட்டானா என்று

ஏக்கப் பெருமூச்சோடு காத்திருந்தாள். நாட்கள் நகர்ந்தன. மாதங்கள் உருண்டன. வருடங்களும் கடந்தன. அவள் கண்ணீரோ மாறவில்லை. அவளுக்கு ஜெபம் செய்ய பிரியமில்லை. வேத புத்தகத்தையும் வெறுத்தாள். தன் உள்ளம் ஆறுதல் பெற விடாமல் தேம்பிக் கொண்டிருந்தாள்.

தேவன் அவள் மேல் இரக்கங்கொண்டு ஒரு பரலோக தரிசனத்தைக் காண்பிக்க சித்தம் கொண்டார். சிறுவர்கள் மிக அழகிய பரலோக பூங்காவில் ஓடி ஆடி ஆனந்தமாய் விளையாடிக் கொண்டிருந்தனர். எவ்வளவு அழகிய மலர்கள்! எவ்வளவு அழகிய தோட்டம்! கனிவர்க்கங்கள் மகிமையான பொன் நிற ஒளி வீசிக் கொண்டிருந்தன. தன் மகன் அதில் இருக்கிருஞ என்று ஆவலோடு தேடிப்பார்த்தாள். மகனைக் காணும். அழுகையோடு அந்தத் தோட்டம் முழுவதையும் மீண்டும் தேடினுள். அதோ அவள் மகன் ஒரு பெரிய தொட்டியிலுள்ள தண்ணீரை தான் ஒருவனுய்ச் சுமந்து சுமந்து வெளியே ஊற்றித் தனியாய் வேதனைப்பட்டுக் கொண்டிருந்தான். "மகனே", தாய் ஓடிப்போய் அணைத்தாள். 'மற்ற சிறுவர்களெல்லாம் சந்தோஷமாய் ஆடிப்பாடி விளையாடிக் கொர்ண்டிருக்கும் பொழுது, மகனே, நீ மட்டும் ஏன் தண்ணீர் சுமந்து கொண்டு கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிருய்?"

"அம்மா, இந்தத் தண்ணீர் நீங்கள் பூமியில் வடிக்கும் கண்ணீர்தான். நீங்கள் பூமியில் கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கும் வரை இங்கு என்னுல் மகிழ்ச்சியாயிருக்க முடியாது. அம்மா நான் மகிழ்ச்சியாய் இருக்கும்படி நீங்கள் கண்ணீரை நிறுத்துவீர்களா?" அன்று முதல் தன் கண்ணீரை நிறுத்தியது மட்டுமல்ல; கிறிஸ்துவின் பாதத்தில் அதிக நேரம் ஜெபிக்கவும் கற்றுக்கொண்டாள்.

"ஏன் அழுகிருய்? யாரைத் தேடுகிருய்?" கல்லறையில் இயேசுவைத்தேடி அழுதுகொண்டிருந்த மகதலேனு மரியாளின் காதுகளில் இயேசுவின் இனிய குரல் ஒலித்தது.

உயிரோடிருக்கிற தன் மீட்பரை முகாமுகமாய் கண்டாள். கண்ணீரெல்லாம் மறைந்தது. ஆ! எத்தனை மகிழ்ச்சி. எத்தனை ஆனந்தம்.

10. கண்ணீரைத் துடைப்பவர் சீக்கிரமாய் வருகிறார்:

நாமும் நம் மீட்பரைச் சீக்கிரமாகத் தரிசிப்போம். ஆமென். இயேசுவே வாரும் என்று அன்போடு அழைப்போம். நம் கண்ணீர், கவலை மாறும் அந்த நாள் எவ்வளவு மகிழ்ச்சியான நாள்.

''அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார்; இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை; முந்தினவைகள் ஒழிந்து போயின''- (வெளி 21:4)

''சிங்காசனத்தின் மத்தியிலிருக்கிற ஆட்டுக்குட்டியானவரே இவர்களை மேய்த்து' இவர்களை ஜீவத்தண்ணீருள்ள ஊற்றுகளண்டைக்கு நடத்துவார்; தேவன் தாமே இவர்களுடைய கண்ணீர் யாவையும் துடைப்பார்" (வெளி 7 : 17)

''அவர் மரணத்தை ஜெயமாக விழுங்குவார். கர்த்தராகிய தேவன் எல்லா முகங்களிலுமிருந்து கண்ணீரைத் துடைத்து, தமது ஜனத்தின் நிந்தையைப் பூமியிலிராதபடி நீக்கி விடுவார்; கர்த்தரே இதைச் சொன்னார். (ஏசாயா 25:8).

கண்ணீரோடு ஜெபிக்கும் தேவனுடைய பிள்ளையே, இதோ, தேவனுடைய வாக்குத்தத்தம் உனக்கு வருகிறது'' நான் எருசலேமில் களிகூர்ந்து என் ஜனத்தின் மேல் மகிழ்ச்சியாயிருப்பேன். அழுகையின் சத்தமும் கூக்குரலின் சத்தமும் இனி அதில் கேட்கப்படுவதில்லை'' (ஏசாயா 65:19) ஆமென். அல்லேலூயா!

வேத வசனத்தின் வல்லமை!

வேத வசனமே, ஆவியின் பட்டயம்! (எபேசியர்:6:17). எதிராளியைத் தாக்கி நொறுக்கும் கர்த்தரின் சம்மட்டி! தேவன் நம்முடைய கைகளிலே தந்திருக்கும் மாபெரும் சர்வாயுதவர்க்கம்!

வேத வாக்கியங்களை செயல்முறைக்குக் கொண்டுவா. அவை ஆவியாயும் ஜீவனுமாயும், வல்லமையாயும் இருக்கும் போராயுதங்கள்!

அம்பத்தூரை அடுத்த கிராமம் ஒன்றில் ஒரு போதகர் ஊழியஞ்செய்து கொண்டுவந்தார். அவரது வீட்டின் அருகில் வசித்த ஒரு பெரிய அதிகாரி, போதகரை அந்த வீட்டை விட்டுக் கிளப்ப விரும்பி, ஒரு மந்திரவாதியை அழைத்து போதகருக்கு விரோதமாய் பில்லி சூனியம் செய்தார்.

ஒரு நாள் நடு இரவில் போதகர் தன் வீட்டு மாடியில் ஜெபித்துக் கொண்டு கீழே பார்த்தபோது, அங்கே இருளில் மந்திரவாதியும், அந்த அதிகாரியும், முட்டை, எலுமிச்சம்பழம், முடி, துணி பொம்மையை தன் வீட்டின் வாசலில் வைத்துப் போவதைக் கண்டார். அவர்கள் சென்றதும், கீழே இறங்கி அந்தப் பொருட்களையெல்லாம் வாரி எடுத்து மாடியில் கர்த்தருடைய பாதத்தில் வைத்து தமது போராயுதமாக I யோவான் 4:4 ஐ வைத்து ஜெபித்தார். அந்த வசனம் ''உலகத்திலிருக்கிறவனிலும் உங்களிலிருப்பவர் பெரியவர்'' என்பதே! வசனத்தின் வல்லமை அந்த அதிகாரியின் மேல் இறங்கியது! அந்த வாரத்தில் தானே அந்த அதிகாரி மரித்துப் போனார்.

"உனக்கு விரோதமாய் உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க்காதேபோம், என்று கர்த்தர் தமது வசனத்தில் நமக்கு வாக்குக் கொடுக்கவில்லையா? (ஏசாயா 54: 17)

"பிசாசின் கிரியைகளை அழிக்கும்படிக்கே தேவனுடைய குமாரன் வெளிப்பட்டார்" (I யோ 3:8).

பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள்; அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான். (யாக் 4;7)

நான் இயேசுவை ருசிக்க ஆரம்பித்த ஆரம்ப நாட்களில் ஒரு சகோதரன் என்னிடம் ஜெபிக்கும்படியாக வந்தான். அவனுக்கு இரவெல்லாம் தூக்கமில்லை என்றும், பயங்கர கனவுகள் வருகிறதென்றும் தன் பிரச்னைகளைப் பகிர்ந்து கொண்டான்.

ஆனால் ஜெபிக்க ஆரம்பித்த மறு வினாடியே, அவன் "தொப்" என்று கீழே விழுந்தான். அவன் முகரூபம் பயங்கரமாக மாறிவிட்டது. ஏராளமான பிசாசுகள் அவனுக்குள் குடிகொண்டிருப்பதை அறிந்தேன். எனக்கோ பிசாசைத் துரத்துவது எப்படி? அதற்கு என்னென்ன வாக்குத்தத்த வசனங்கள் உண்டு என்பது தெரியவில்லை. அன்றே ஒரு போதகரிடம் சென்று இதுபற்றி விசாரித்தேன். அவர் விலையேறப் பெற்ற, வல்லமையான, அதிகாரமுள்ள வசனம் ஒன்றைக் காண்பித்தார், இயேசு கிறிஸ்து நமக்குக் கொடுத்திருக்கும் வாக்குத்தத்த வசனம் அது! "இதோ சர்ப்பங்களையும், தேள்களையும் மிதிக்கவும், சத்துருவினுடைய சகல வல்லமைகளையும் மேற் கொள்ளவும் உங்களுக்கு அதிகாரங் கொடுக்கிறேன். ஒன்றும் உங்களைச் சேதப்படுத்த மாட்டாது (லூக் 10: 19).

ஆ! இந்த வசனம் எவ்வளவு விலையேறப்பெற்ற வல்ல மையுள்ளது என்பது நடைமுறைக்குக் கொண்டு வந்த பின் தான் எனக்குத் தெரிந்தது. மறுநாள் அந்த சகோதரனை வரவழைத்து, ஜெபிக்க ஆரம்பித்தோம். இந்த வசனத் தின் மீது என் கரத்தை வைத்து, இந்த வசனத்தைத்தந்த ஆண்டவரை நோக்கிக் கூப்பிட்டபோது, உண்மையாகவே அவர் இறங்கி, ஒவ்வோர் அசுத்தாவியாக மொத்தமிருந்த பத்தையும் விரட்டி, தம் வசனத்தை உறுதிப்படுத்த அவர் ஜீவனுள்ளவராயிருந்தார்.

இயேசு கிறிஸ்துவின் ஆயுதம் என்ன? அவர் உபவாச மிருந்த பின்பு சோதனைக் காரன் அவரைச் சோதிக்க வந்த போது, அவனை வேத வசனங்கள் மூலமாகவே ஜெயித் தார். நாமும் சத்துருவை எப்படி ஜெயிப்பது என்று முன் மாதிரி காண்பித்தார். வேத வசனங்கள் இயேசுவின் உத டுகளில் தங்கு தடையின்றி மடைதிறந்த வெள்ளம்போல் வெளிவந்தன. ''எழுதியிருக்கிறதே" என்று ஒவ்வொரு வசனமாக மேற்கோள் காட்டி பிசாசை வெட்கப்படுத் தின ர்(மத் 4:4, 7, 10)

சங்கீதக்காரனின் அனுபவம் என்ன? ''நான் உமக்கு விரோதமாய்ப் பாவஞ் செய்யாதபடிக்கு, உமது வாக்கை என் இருதயத்தில் வைத்து வைத்தேன்." (சங் 119:11)

எவ்வளவுக் கெவ்வளவு வேத வசனங்களை மனப்பாடம் செய்து நமது நினைவில் நிறுத்துகிறோமோ அவ்வளவுக் கவ்வளவு சத்துருவின் மேல் ஜெயத்தையும், விடுதலை யையும் ஆசீர்வாதத்தையும் நமக்குக் கொடுக்கும். சமாதானம், பிசாசின் மேல் வெற்றி, நோய்களை நீக்குவது, கவலையில் ஆறுதல் போன்ற தலைப்புகளின் படியும் ஞாபகம் செய்து வைப்பது திடீரென்று எதிர்பாரத நேரம் நமக்குக் கைகொடுத்து உதவி செய்யும். தேவ கட்டளையும் கூட அதுதான். ''இன்று நான் உனக்குக்

கட்டளையிடுகிற இந்த வார்த்தைகள் உன் இருதயத்தில் இருக்கக்கடவது. நீ அவைகளை உன் பிள்ளைகளுக்குக் கருத்தாய்ப் போதித்து, நீ உன் வீட்டில் உட்கார்ந்திருக்கிற போதும், வழியிலே நடக்கிறபோதும், படுத்துக்கொள்கிற போதும், எழுந்திருக்கிறபோதும் அவைகளைக் குறித்துப் பேசு (உபா 6:6, 7).

யுத்த களத்திலிருக்கும் போர் வீரர்களுக்கும், குழந்தையாய் வளருகிறவர்களுக்கும் பால் எவ்வளவு அவசியமாகிறது. "நீங்கள் வளரும்படி புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப் போல திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப் பாலின்மேல் வாஞ்சையாயிருங்கள்" (1 பேதுரு 2:3) தாகமும் வாஞ்சையும் இருந்தால் மட்டுமே வேத வசனங்களை மனப்பாடம் செய்ய முடியும். அப்போஸ்தலனாகிய பவுல் எழுதுகிறார் "கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக" (கொலோ 3:16).

ருமானியா தேசம், ரஷ்யர்களால் பிடிக்கப்படுமுன், ஆவியானவர் அநேக தேவ பிள்ளைகள் மூலம் "வசனம் கிடைக்கக் கூடாத பஞ்சம் வரப்போகிறது" என்று எச்சரித்துக் கொண்டே வந்தார். எனவே விசுவாசிகள் முழு முழு அதிகாரங்களாக மனப்பாடம் செய்தனர். சிலர் சுவிசேஷ புஸ்தகங்கள் முழுவதையும் நினைவில் வைத்தனர். திடீரென்று கிருபையின் காலம் அங்கு முடிந்து, கம்யூனிச ஆட்சி ஏற்பட்டது. வேத புத்தகங்கள் பிடுங்கப்பட்டு எரிக்கப்பட்டன. வேதத்தின் ஒரு தாள், ஒரு பக்கம் கூட கிடைக்காமற் போயிற்று. ஆனால் வேதத்தைக் கற்றவர்கள், சித்திரவதை நேரங்களில் பெலன் ஊட்டும் வேத வசனங்களை மீண்டும் மீண்டும் சொல்லிச் சொல்லி தேவபெலத்தைப் பெற்றுக் கொண்டார்கள். சத்துருவால் அவர்களது விசுவாசத்தை அழிக்க முடியவில்லை.

''தேவ வசனமாகிய ஆவியின் பட்டயத்தை எடுத்துக் கொள்ளுங்கள்" என்று அப், பவுல் எச்சரிப்பான ஆலோசனையைத் தருகிருர் (எபே 6:17) ''தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையுமுள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும், ஆவியையும், கணுக்களையும், ஊனையும், பிரிக்கத்தக்கதாக உருவக்குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும், யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது." (எபிரேயர் 4:12).

யுத்தத்தில் தற்பாதுகாப்புக் கென்று உபயோகிக்கும் படைக்கலனும் உண்டு. எதிராளியைத் தாக்கி வீழ்த்தும் போராயுதமும் உண்டு. வேத வசனமோ, நம்மைப் பாதுகாக்கும் கேடகமாகவும், சத்துருவை வீழ்த்தும் ஆவியின் பட்டயமாகவும் இருவிதத்திலும் நமக்குப் பயன்படுகிறது.

வேத வசனங்களை வாசித்து மனப்பாடம் செய்வது மட்டுமல்ல, அனுதின சத்துருவின் போராட்டத்தில், சோதனை நேரங்களில், ஆபத்து வேளைகளில் அவை உன் போராயுதமாயிருக்கும் படி அப்பியாசப்படுத்து. 'ஆண்டவரே என்னைப் பயிற்றுவியும்' என்று மன்றுடிக் கேள். அப்போது தாவீது ராஜாவோடு கூடச் சேர்ந்து தேவனை ஸ்தோத்தரிப்பாய்.'' அவர் எழுதுகிருர். ''என் கைகளைப் போருக்கும், என் விரல்களை யுத்தத்திற்கும் படிப்பிக்கிற என் கன்மலையாகிய கர்த்தருக்கு ஸ்தோத்திரம்." (சங் 144:1)

ஆமென்! அல்லேலூயா!!

எங்கள் குடும்பம் பெரியது!

தேவ தூதர்கள்

இஸ்ரவேலைச் சுற்றி போர் மேகங்கள் சூழ்ந்திருந்தன!

அசீரியா ராஜாவாகிய சனகெரிப் திரளான யுத்த வீரரோடு கூட இஸ்ரவேல் ராஜாவாகிய எசேக்கியாவின் மேல் படையெடுத்துக் கொண்டு வந்தான். அசீரியா இராஜாவின் படைத் தளபதிகள், இஸ்ரவேலரையும் கர்த்தரையும் தூஷித்தனர். அவர்களை எதிர்த்து நிற்க எசேக்கியாவிடம் படை பலமுமில்லை. உள்ளத்தின் உறுதியுமில்லை. அது மட்டுமல்ல, அசீரியா ராஜா தன்ஸ்தானபதிகளின் மூலம் பயமுறுத்தலான நிருபத்தைக் கொடுத்து அனுப்பினன் (II ராஜா 19 அதி) எசேக்கியாவின் உள்ளம் தடுமாற ஆரம்பித்தது. எந்த விதத்திலும் தான் வெற்றி பெறமுடியாத சூழ்நிலை இருப்பினும், அவன் ஒரு காரியத்தைச் செய்தான்.

''நிருபத்தை வாங்கி வாசித்த பின்பு, அவன் கர்த்தரின் ஆலயத்திற்குப் போய், அதைக் கர்த்தருக்கு முன்பாக விரித்து..." ''இப்பொழுதும் எங்கள் தேவனாகிய கர்த்தாவே, நீர் ஒருவரே தேவனாகிய கர்த்தர் என்று பூமியின் ராஜ்யங்கள் எல்லாம் அறியும்படி, எங்களை அவன் கைக்கு நீங்கலாக்கி இரட்சியும்'' என்று விண்ணப்பம் பண்ணினன். (II ராஜா 19:14,19)

''அன்று இராத்திரியில் சம்பவித்தது என்னவென்ருல் கர்த்தருடைய தூதன் புறப்பட்டு, அசீரியரின் பாளயத்தில் லட்சத்தெண்பத்தையாயிரம் (1,85,000) பேரைச் சங்கரித்தான். அதிகாலமே எழுந்திருக்கும் போது, இதோ அவர்கள் எல்லாரும் செத்த பிரேதங்களாய்க் கிடந்தார்கள்." (II ராஜா 19:35)

எசேக்கியேலின் ஜெபம் கேட்ட தேவன் இன்றைக்கும் ஜீவிக்கிறவர்; மாருதவர். தேவனுடைய பிள்ளையே, அவர் உன் ஜெபத்தையும் கேட்பார். நீ போராட்டத்தின் பாதையிலே கடந்து செல்கிருயோ? உன் வேதனைகளைக் கர்த்தருடைய சமூகத்திலே திறந்து வை. யெப்தா தன் காரியங்களையெல்லாம் மிஸ்பாவிலே கர்த்தருடைய சந்நிதியிலே சொன்னபோது, தேவன் அவனுக்காக யுத்தஞ் செய்யவில்லையா?

1. நமது குடும்பம் பெரிது:-

நாம் நம் அருமை ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளும்போது ஒரு பெரிய குடும்பத்தில் வந்து சேருகிரேும். கிறிஸ்தவ குடும்பம் எவ்வளவு பெரியது தெரியுமா? அப். பவுல் சொல்கிருர். ''நீங்களோ சீயோன் மலையினிடத்திற்கும், ஜீவனுள்ள தேவனுடைய நகரமாகிய பரம எருசலேமினிடத்திற்கும், ஆயிரம் பதினயிரமான தேவ தூதர்களினிடத்திற்கும், பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற முதற்பேருனவர்களின் சர்வ சங்கமாகிய சபையினிடத்திற்கும், பூரணராக்கப்பட்ட நீதிமான்களுடைய ஆவிகளினிடத்திற்கும், புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராகிய இயேசுவினிடத்திற்கும், ஆபேலினுடைய இரத்தம் பேசினதைப் பார்க்கிலும் நன்மையானவைகளைப் பேசுகிற இரத்தமாகிய தெளிக்கப்படும் இரத்தத்தினிடத்திற்கும் வந்து சேர்ந்தீர்கள்." (எபிரேயர் 12:22)

ஒன்றைக் கவனியுங்கள்: ஆயிரம் பதினாயிரமான தேவ தூதர்கள்; ஆம் அவர்கள் நம் குடும்பத்தில் நமது பணி விடை ஆவிகளாய் நமக்காக யுத்தஞ் செய்கிறார்கள். இன்னும் நான் அதை விளக்கமாகச் சொல்லட்டும்.

ஒரு ராஜா பவனி வரும் போது போர் வீரர்களெல்லாம் தெருக்களைச் சுத்தம் செய்து, பிச்சைக்காரர்களையெல்லாம் விரட்டியடித்துக் கொண்டிருந்தார்கள். ஒரு வாலிபப் பெண், பரம ஏழையும், கந்தல் துணி கோலமாய்த் தன் ராஜாவைக் காணும்படி தெருவிலே ஒதுங்கி நின்றாள். ஆனால் போர் வீரர்களும், தளபதியுமோ அவளைத் துரத்தி மிகத் தூரமான இடத்திற்கு விரட்டினார்கள். அந்த நேரம்—ராஜாவின் கண்கள் அவளைக் கண்டது. அவளை அழைத்தார். 'இவள் என் மனைவியாயிருப்பாள்' என்று சொல்லிவிட்டுத் தன் அரண்மனை திரும்பினார்.

இப்பொழுது அவளுக்கு ராஜ உபசாரம். எந்த போர் வீரர்கள் அவளை விரட்டியடித்தார்களோ, அவர்கள் இப்பொழுது அவர்களுக்காக அடிமை வேலை செய்யக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த ராஜாங்கத்தின் சகல அதிகாரங்களும் அவளுக்குக் கீழ்ப் படிகின்றன!

அதேபோல, நாம் அந்நியரும் பரதேசிகளுமாய் இருந்த போது நம் அருமை ஆண்டவரின் கண்கள் நம்மைக் கண்டது. உளையான சேற்றிலிருந்து நம்மைத் தூக்கினார். பாவங்களற தம் இரத்தத்தால் கழுவினார். இரட்சிப்பின் வஸ்திரங்களையும், நீதியின் சால்வைகளையும் நமக்கு உடுத்தினார். அது மாத்திரமல்ல; அவர் நம்மைத் தமது மணவாட்டியின் ஸ்தானத்திற்கு உயர்த்தியபடியால், பரலோகக் குடும்பத்தில் நாம் இப்பொழுது முக்கிய அங்கம் வகிக்கிறோம்.

தேவனுடைய பிள்ளையே, நீ கிறிஸ்துவில் இருப்பதால் தேவன் உனக்கு அருளிய மாபெரும் ஈவுகளைச் சிந்தித்துப்பார்!

எவ்வளவு மேன்மை! முன்னால் ஏதேன் தோட்டத்தைக் காவல் காத்துக் கொண்டிருந்த தூதர்கள், இப்பொழுது இரட்சிப்பைச் சுதந்தரித்துக் கொள்ளும் தேவ பிள்ளைகளுக்கு பணிவிடை ஆவிகளாய் மாறினார்கள்; பரலோகம் நம் சொந்தக் குடும்பம்!

நமது குடும்பத்திலிருக்கும் தேவ தூதர்களைக் குறித்து வேதம் சொல்வதென்ன? "இரட்சிப்பைச் சுதந்தரிக்கப் போகிறவர்களினிமித்தமாக ஊழியஞ் செய்யும்படிக்கு அவர்களெல்லாரும் அனுப்பப்படும் பணிவிடை ஆவிகளாயிருக்கிறார்களல்லவா?" (எபிரேயர் 1: 14)

நமக்குப் பணிவிடை செய்யும்படி நம்தேவன் அவர்களை நியமித்திருக்கிறார்! அல்லேலூயா!

2. பலமிக்க தேவ தூதர்கள் நம் பக்கம்!

கர்த்தருடைய தூதன் அவருக்குப் பயந்தவர்களைச் சூழப் பாளயமிறங்கி அவர்களை விடுக்கிறார். சங் 34:7. எவ்வளவு வல்லமையான வாக்குத்தத்தம் பாருங்கள்! அது மட்டுமா? உன் வழிகளிலெல்லாம் உன்னைக்காக்கும்படி, உனக்காகத் தம்முடைய தூதர்களுக்குக் கட்டளையிடுவார். உன் பாதம் கல்லில் இடறாதபடிக்கு அவர்கள் உன்னைத் தங்கள் கைகளில் ஏந்திக் கொண்டு போவார்கள், (சங் 91: 11, 12). ஆம் உன் கால்களை ஏந்த தேவதூதரின் கைகள் எப்பொழுதும் ஆயத்தமாயிருக்கின்றன. நீ ஏன் பயப்படுகிறாய்? தேவப் பிரசன்னத்தையும், தேவதூதர் பிரசன்னத்தையும் எப்பொழுதும் உணருவாயாக!

கல்லறையின் பெரும் கல்லை யார் தங்களுக்குப் புரட்டித் தள்ளுவார்கள் என்ற பிரச்சனையோடு மகதலேனா மரியாளும் மற்ற மரியாளும் கவலையோடு வந்தார்கள். அப்பொழுது பூமி மிகவும் அதிரும்படி கர்த்தருடையதூதன் வானத்தி

லிருந்து இறங்கி வந்து, வாசலிலிருந்த கல்லைப் புரட்டித் தள்ளி அதின் மேல் உட்கார்ந்தான் (மத் 28:2) ஆம்; கர்த்தர் நமக்காய் யாவையும் செய்து முடிக்கிறவர்!

எரிகோ இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாக அடைக்கப் பட்டிருந்தது. யோசுவா எரிகோவின் வெளியிலிருந்து தன் கண்களை ஏறெடுத்துப் பார்க்கும் போது இதோ ஒருவர் அவனுக்கு எதிரே நின்றார். உருவினபட்டயம் அவர் கையில் இருந்தது. 'நான் கர்த்தருடைய சேனையின் அதிபதியாய் இப்பொழுது வந்தேன்' என்றார்! (யோசுவா 5: 13-15) அதே சேனையின் அதிபதி இன்றைக்கும் உனக்காக யுத்தம் செய்யும்படி, ஜெயம் தரும்படி உன்னோடேயே கூட இருக்கிறார், அல்லேலூயா!

ஆம்; கர்த்தருடைய சேனையின் அதிபதி நம்மோடு கூட இருக்கிறார். கர்த்தர் உங்களுக்காக யுத்தம் பண்ணுவார்; நீங்கள் சும்மாயிருப்பீர்கள். (யாத் 14 : 14).

சேனைகளின் தேவனாகிய கர்த்தர் என்பது அவர் நாமம். பேதுரு சிறையில் வைக்கப்பட்டிருந்த போது கர்த்தருடைய தூதன் இராத்திரியிலே சிறைச் சாலையின் கதவுகளைத் திறந்து; அவர்களை வெளியே கொண்டு வந்து; 'நீங்கள் போய், தேவாலயத்திலே நின்று இந்த ஜீவ வார்த்தைகள் எல்லாவற்றையும் ஜனங்களுக்குச் சொல்லுங்கள்,' என்றான். (அப் 5:19, 20). ஆம்; முழு பரலோகமும் நம்பக்கம் தான்; பயப்படாதே! சத்தியத்தை தைரியமாய் அறிவி!

இரண்டாம் முறை ஏரோதினாலே பேதுரு சிறை வைக்கப்பட்டபோது சபையார் அவனுக்காக ஊக்கமாக ஜெபம் பண்ணினார்கள். அப்பொழுது கர்த்தருடைய தூதன் அங்கே வந்து நின்றான்; அறையிலே வெளிச்சம் பிரகாசித்தது. பேதுருவின் கைகளிலிருந்த சங்கிலிகள் தெறித்து விழுந்தன. எல்லாக் காவல்களையும் கடந்து தூதன்

வெளியே கொண்டுவந்து விட்டான் (அப் 12:7-12) ஆம் உன் ஊக்கமான ஜெபம் நிச்சயமாகவே தேவதூதரைக் கீழே இறக்கும்!

பவுலும் சீலாவும் சிறையில் பாடித் தேவனைத்துதித்த போது, சிறையின் அஸ்திவாரங்கள் அசையும் படியாக பூமி மிகவும் அதிர்ந்தது. உடனே கதவுகளெல்லாம் திறவுண்டன. எல்லோருடைய கட்டுகளும் கழன்று போயின! (அப் 16 :26). உன் கட்டுகள் என்ன? போராட்டங்கள் என்ன? அடைபட்ட கதவுகள் என்ன? நீ தேவனைப்பாடித் துதிக்கும் போது நிச்சயமாய் அவைகள் உடைபட்டே தீரும்!

நம்தேவன் பெரியவர்; சேனைகளின் தேவனாகிய கர்த்தர் என்பது அவரது நாமம். "யார் இந்த மகிமையின் ராஜா? அவர் வல்லமையும் பராக்கிரமமுள்ள கர்த்தர்; அவர் யுத்தத்தில் பராக்கிரமமுள்ள கர்த்தராமே." (சங் 24:8). ஆம்! அவரைத் தஞ்சமாகக் கொண்டுள்ள ஜனம் பாக்கியமுள்ளது, பாக்கியமுள்ளதே!

3. மிகாவேலே, நீ என்ன செய்து கொண்டிருக்கிறாய்?

ஒரு கிராமத்தில் சுவிசேஷ எழுப்புதல் கூட்டங்கள் நடந்து கொண்டிருந்தது. ஏராளமான ஏழை கிராம மக்கள் சுவிசேஷத்தை வாஞ்சையோடு கேட்டுக் கொண்டிருந்தார்கள். ஆனால் பிசாசானவன் சிலரைத் தூண்டிவிட்டுக் கூட்டத்தில் குழப்பம் ஏற்படுத்த முயற்சித்துக் கொண்டிருந்தான். ஊரின் பெரிய ரவுடி ஒருவன், நான் பிரசங்கியாரை வெட்டப் போகிறேன் என்று சொல்லி ஒரு பெரிய அரிவாளுடன் கூட்டம் நடக்கும் பந்தலுக்குள் வேகமாக, கோப வெறியுடன் நுழைந்தான். பளபளக்கும் அரிவாளுடன் மேடையை நெருங்கிய அந்த ரவுடியைக் கண்டு கூட்டத்திலிருந்த விசுவாசிகளெல்லாம் நடுங்கினர். அடுத்த நிமிடம் பிரசங்கியாரின் தலை துண்டாகக் கீழே விழும் என்று பயந்தி

ருந்தனர். பிரசங்கியார் அமைதியாக, ஆனால் உறுதியான குரலில் ''மிகாவேலே, நீ என்ன செய்து கொண்டிருக்கிறாய்?'' என்று வானத்தைப் பார்த்து ஒரு கேள்வி கேட்டார். அவ்வளவுதான். மறு விநாடி அந்த ரவுடிக்குத் தன் கையையோ, கால்களையோ அசைக்க முடியவில்லை. ஓங்கிய கை ஓங்கியபடியே நின்று கொண்டிருந்தது. சிலையைப் போல அப்படியே நின்று போய் விட்டான். கைகால்கள் மரத்துப் போய்விட்டன. சிங்கங்களின் வாய்களைக்கட்டித் தானியேலைப் பாது காத்த தேவதூதன் இன்னும் தேவனுடைய மக்களுக்காக யுத்தஞ் செய்ய ஆவலோடு காத்துக் கொண்டிருக்கிறான். (தானி 3: 28)

தேவனுடைய யுத்தப்பிரிவிலே பிரதான தூதனாய் இருப்பவர் மிகாவேல். ''உன் ஜனத்தின் புத்திரருக்காக நிற்கிற பெரிய அதிபதியாகிய மிகாவேல்'' என்று வேதம் சொல்கிறது. (தானி 12 : 1) ''பிரதான தூதனாகிய மிகாவேல்'' என்று யூதா 9ஆம் வசனத்தில் வாசிக்கிறோம். ''வானத்திலே யுத்தமுண்டாயிற்று. மிகாவேலும் அவனைச் சேர்ந்த தூதர்களும் வலுசர்ப்பத்தோடே யுத்தம் பண்ணினார்கள். வலு சர்ப்பமும் அதைச்சார்ந்த தூதரும் யுத்தம் பண்ணியும் ஜெயங்கொள்ளவில்லை'' வெளி 12 : 7 சாத்தான் ஒரு போதும் ஜெயங்கொள்ளவே மாட்டான்! நம் தேவன் பெரியவர்! வல்லமையுள்ளவர்!

நமது குடும்பத்தில், மிகாவேலின் தலைமையில் யுத்தம் செய்யும் தேவதூதருண்டு. காபிரியேலைப் போல, தேவ செய்திகளை சுமந்துவரும் தேவதூதருமுண்டு! பாதுகாக்கும் தூதருண்டு. தூக்கிச் சுமந்து செல்லும் தூதருண்டு. துதித்துப் பாடும் கேராபீன்களும் சேராபீன்களும் உண்டு. சுழலும் சுடரொளிப் பட்டயங்களுண்டு! எனவே, விசுவாசியே, நீ ஒரு போதும் தனிமையாய் இருப்பது இல்லை. மேகம் போன்ற திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்து கொண்டிருக்கின்றன. (எபிரேயர் 12 : 1) என்று நிச்சயமாக அறிந்து கொள்! எனவே தனிமையைப்பற்றி அஞ்சாதே!

4. நமது பணிவிடை ஆவிகள்:-

எனக்கு ஓர் ஏழை ஊழியரைத் தெரியும். பிரசங்க சாதுரியம் இல்லாதவராயிருந்தாலும் கர்த்தர் மேல் அளவில்லாத அன்பும் விசுவாசமும் உள்ளவர். அவர் ஒருமுறை வட ஆற்காடு மாவட்டத்தில் ஊழியஞ் செய்து கொண்டிருந்தபோது அவரை உபசரிப்பார் யாருமில்லை. இரவு உணவோ, படுப்பதற்கு இடமோ கிடைக்கவில்லை. பட்டினியோடு, ஓர் ஆலயத்தின் வாசற் படிக்கட்டில் அமர்ந்து ஒரு சிறு ஜெபம் செய்தார். பசியோடு படுத்து விட்டார். ஏறத்தாழ அரைமணி நேரத்தில் யாரோ தன்னைத் தொட்டு எழுப்புவதைப் போன்றிருந்தது. எழுந்த போது தன் கண்களைத் திறக்கக் கூடாத அளவிற்கு பிரகாசம் வீசிக் கொண்டிருந்தது. இரண்டு தேவதூதர் வந்திருந்ததை அந்த ஊழியர் உணர்ந்தார். ஒருவன் இலை விரிக்க, மற்ற தூதன் உணவு பரிமாற, ஊழியரை இருவரும் மிகவும் அன்பாய் உபசரித்து, ஊழியர் விரும்பி சாப்பிடும் ஒவ்வொன்றையும் தந்தனர். ஊழியர் உணவருந்தும்போது, அந்த தேவ தூதர்கள் தாங்கள் உலகமெங்கும் செய்யப்போகும் அநேக காரியங்களைக் குறித்துப் பேசிக் கொண்டிருந்தனர். வயிறார உண்ட ஊழியரைத் தூங்க வைத்துவிட்டு, தூதர்கள் கடந்து சென்றனர். ஆம்: தேவன் தம்முடைய பிள்ளைகள் மேல் எவ்வளவு கரிசனையாய் இருக்கிறார், பாருங்கள்! பூமியை உலுக்கக் கூடிய மாபெரும் தேவதூதர்களை ஏழை ஊழியருக்கு பணிவிடை ஆவிகளாகத் தந்திருக்கிறார். எலியா சூரைச் செடியின் கீழ் மனச்சோர்வுற்றவனாகப் படுத்திருந்த போது, தூதன் அவனைத்தட்டி எழுப்பி அடையும் தண்ணீரும் தரவில்லையா? (I ராஜா 19: 4-8.) தேவன் தன் தூதனை இரண்டு முறை அழுகின்ற ஆகாரிடம் அனுப்பி ஆறுதல் சொல்லவில்லையா? சுரக்கும் நீரூற்றைக் காண்பிக்கவில்லையா? (ஆதி 16:7-11, 21:19) ஆபிரகாமுக்குப் பின் வரும் காரியங்களை அறிவித்தாரே (ஆதி 18:2, 22:11, 15) லோத்தை சோதோமின் அழிவுக்குத் தப்புவிக்க

தமது தூதரை அனுப்பி விடுவிக்கவில்லையா? (ஆதி 19:1-22) வானத்திற்கும் பூமிக்கும் வைக்கப்பட்ட ஏணியில் தேவ தூதர் எவ்விதமாக வந்து போகின்றார்கள் என்று யாக்கோபிற்குக் காண்பித்தார். (ஆதி 28:12) யாக்கோபின் சொப்பனத்திலும், வழிப்பிரயாணத்திலும் தூதர்கள் அவனைச் சந்தித்தார்கள். (ஆதி 31:11, ஆதி 32:1) முட்செடியில் உண்டான அக்கினி ஜுவாலையிலிருந்து கர்த்தருடைய தூதனானவர் மோசேயோடு பேசினார். (யாத் 3:4). பிலேயாமைத் திருத்தும்படி தம் தூதனை அனுப்பினார்.(எண் 22:23-35) சேனைகளின் அதிபதியாய் யோசுவா முன் தோன்றிய தூதன் யோசுவாவைத் திடப்படுத்தினான்.(யோசு 5:15)கிதியோனின் உன்னத அழைப்பை தேவதூதன் விவரித்தான். (நியாயாதி 6:12) சிம்சோனின் பெற்றோருக்கு முன் அறிவிக்க இரண்டுமுறை தேவதூதன் அனுப்பப்பட்டான். (நியா 13: 3, 21) தாவீதுக்கு,(2 சாமு 24)எலிசாவிற்கு நான்கு முறை தூதர்கள் தரிசனத்தில் தோன்றி சம்பாஷித்தனர்! ஆம், நமக்குப் பணிவிடை செய்ய நம் தேவன் பலமிக்க தேவதூதர்களை வேகமாய் தீவிரமாய் அனுப்புகிறார் என்பதற்கு வேதம் எண்ணற்ற சாட்சிகளை நம் கண் முன் நிறுத்துகிறது!

ஆம்; அந்தத் தூதர்களெல்லாம் நம் பக்கம்! நம் குடும்பத்திலுள்ளவர்கள்! நமக்காக யுத்தஞ் செய்கிறவர்கள்! உன் தேவன் உனக்காகத் தம்முடைய தூதர்களுக்குக் கட்டளையிடுவார். (சங் 91:11) ஆமென். அல்லேலூயா!

5. தேவதூதர்களைப் பயன்படுத்திக்கொள்!

உங்கள் வீட்டு வேலைக்காரியை, சோபாவில் உட்காரச் செய்து, ரேடியோ கேட்கும்படி விட்டுவிட்டு நீங்கள் சமையல் அறையிலே கஷ்டப்படுவீர்களா?, என்று போதகர் ரிச்சர்ட் உம்பிராண்ட் கேட்கிறார். தேவன் தமது தூதர்களை நமக்கு பணிவிடை ஆவிகளாக, வேலைக்காரராகத் தந்திருக்க

அவர்களை முற்றிலும் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்பது உம்பிராண்ட் போதகரின் வாதம்!

போதகர் ருமானியா சிறைகளிலே கிறிஸ்துவினிமித்தம் பாடு அனுபவிக்க வேண்டியதிருந்தது. தனிமைச் சிறையிலே, பூமிக்கு அடியிலே, 30 அடி ஆழத்துக்குள் அமைக்கப்பட்ட சிறை அறையிலே அடைக்கப்பட்டார். தனிமை அவருக்கு பைத்தியத்தை வரவழைக்கட்டும் என்று கம்யூனிஸ்டுகள் விரும்பினார்கள்.

ஆனால் அவர் என்ன செய்தார் தெரியுமா? ஊக்கமாக ஜெபித்து தேவ தூதரை அனுப்பும்படி தேவனைக் கேட்டுக்கொண்டார். தான் அடைக்கப்பட்டிருந்த தன் சிறு அறையை ஒரு பெரிய ஆலயமாக எண்ணி, ஆலயத்தில் தேவதூதர்களை அமரச் செய்து பிரசங்கிக்க ஆரம்பித்தார். அந்தப் பிரசங்கங்களை பல சபைகளுக்கும் தனிமையில் வாடும் விசுவாசிகளுக்கும் எடுத்துச் செல்ல தூதருக்குக் கட்டளை கொடுத்தார். அது மட்டுமல்ல. அவர் மனைவிக்கு சொல்ல வேண்டிய செய்தி, தன் மகனுக்கு அறிவுறுத்த வேண்டிய ஆலோசனை எல்லாம் தூதர்கள் மூலம் அனுப்பினார். ஒவ்வொன்றும் தவறாமல் போய்ச் சேர்ந்தன, தூதர்களை வேலை வாங்கிக்கொண்டே இருந்தார். 14 ஆண்டுகள் முடிந்த பின் அவர் விடுதலை ஆக்கப்பட்டபோது அந்தத் தேவ தூதரை மீண்டும்அழைத்து,தான் முன்பு செய்தபிரசங்கங்களை தனக்குத் திரும்பச் சொல்லும்படிக் கேட்டுக்கொண்டார். தூதர்கள் அவற்றை அவருக்குச் சொல்லச் சொல்ல அவற்றை எழுதி, ''சிறைசுவர்கள் பேசுமானால்'' ''தனிமைச் சிறையில் என் பிரசங்கங்கள்'' என்ற தலைப்பில் புத்தகங்களாக வெளியிட்டார்; எவ்வளவு ஆழமான கருத்துகள் அடங்கிய புத்தகங்கள் அவை, தெரியுமா?

சுதந்திர தேசத்தில் விடுதலையோடு இருக்கும் விசுவாசியே, நீயும் உன் வீட்டிலிருந்து கொண்டே உன் ஆறுதலான ஜெபங்களை தூதர்கள் மூலம், கட்டுகளிலும்

காவல்களிலுமிருக்கிற விசுவாசிகளுக்குஏன் அனுப்பக் கூடாது. நீ இங்கிருந்துகொண்டே தூதர்கள் மூலம் சீனாவிலும், ரஷ்யாவிலும், மிஷனரி பணி புரியலாமே!

தேவதூதர்களைக் காட்டிலும் தேவன் நம்மை மகிமையினாலும் கனத்தினாலும் முடி சூட்டியிருக்கிறார் (சங்.8:5) சங்கீதக்காரன் நன்றியோடு சொல்கிறார், "மனுஷனை நீர் நினைக்கிறதற்கும், மனுஷ குமாரனை நீர் விசாரிக்கிறதற்கும் அவன் எம்மாத்திரம்......உம்முடைய கரத்தின் கிரியைகள் பேல் நீர் அவனுக்கு ஆளுகை தந்து சகலத்தையும் அவனுடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தினீர் (சங் 8: 4,6).

"பரலோகத்திலிருந்து அனுப்பப்பட்ட பரிசுத்த ஆவியினாலே உங்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தவர்களைக் கொண்டு இவைகள் இப்பொழுது உங்களுக்கு அறிவிக்கப்பட்டு வருகிறது. இவைகளை உற்றுப்பார்க்கத் தேவதூதரும் ஆசையாயிருக்கிறார்கள்" (I பேதுரு 1:12).

ஆ! தேவன் நம்மேல் பாராட்டின அன்பு எவ்வளவு பெரியது!!

6. எங்கள் கண்களையும் திறந்தருளும்!

எங்கள் போராயுதங்களாக பரலோகத்து தேவதூதர்கள் அணிவகுத்து நிற்கிறார்கள் என்பதைக் காண எங்கள் கண்களைத் திறந்தருளும்!

அன்று எலிசாவைப் பிடிக்க சீரிய ராஜா தன் குதிரைகளையும், ரதங்களையும் பலத்த ராணுவத்தையும் அனுப்பினான். அவர்கள் இராக்காலத்திலே வந்து பட்டணத்தை வளைத்துக்கொண்டார்கள். அதைக்கண்ட எலிசாவின்வேலைக்காரன் அவனை நோக்கி, 'ஐயோ, என் ஆண்டவரே, என்ன செய்வோம்?' என்றான். (II இரா 6:15)

அதற்கு எலிசா, 'பயப்படாதே அவர்களோடிருக்கிறவர்களைப் பார்க்கிலும் நம்மோடிருக்கிறவர்கள் அதிகம்,' என்றான். 'கர்த்தாவே, இவன் பார்க்கும்படி இவன் கண்களைத் திறந்தருளும்' என்று ஜெபித்தபோது, கர்த்தர் அந்த வேலைக்காரனின் கண்களைத் திறந்தார். 'இதோ, எலிசாவைச் சுற்றிலும் அக்கினி மயமான குதிரைகளாலும், இரதங்களாலும் அந்த மலை நிறைந்திருக்கிறதை அவன் கண்டான்'. (II இரா 6:17).

ஜெயம் எலிசாவுக்குத்தான்! எலிசாவின் தேவன் நமது தேவன்! வாருங்கள், வெற்றியைச் சுதந்தரித்துக் கொள்வோம்.

நம்மிலிருக்கிறவர் பெரியவர்! (I யோவான் 4;4)

நம்மோடிருக்கிறவர்கள் அநேகர்! (II ராஜா 6:16)

ஆமென்; அல்லேலூயா!

ஆட்டுக்குட்டியானவரின் இரத்தம்!

நெப்போலியன் ஒருமுறை தன் ராணுவ அதிகாரிகளுடன் ஓர் இரவில் இரகசிய ஆலோசனை நடத்திக் கொண்டிருந்தார். அவருக்கு முன்பாக சுவரில் தொங்கிக் கொண்டிருந்த பெரிய உலகப்படத்தில் ஆங்காங்கே சிவப்பு அடையாளங்கள் காணப்பட்டன. அதைத் சுட்டிக் காட்டி, 'அந்த சிவப்புத் துளிகளாகிய பிரிட்டிஷ் ஆதிக்கத்துக்குள்ளான சில நாடுகள் மட்டும் இல்லாதிருந்தால் நான் முழு உலகத்தையே பிடித்து விடுவேன்! அடக்கி ஆண்டு விடுவேன்,' என்று உறுமினர்!

ஆம்! இயேசுக்கிறிஸ்துவின் இரத்தத்தின் பெருந்துளிகள் மட்டும் நமக்கு அடைக்கலமாயிராதிருந்தால், சத்துரு எப்பொழுதோ நம்மைக் கொள்ளை கொண்டு போயிருந்திருப்பான். இரத்தத்திலிருக்கும் வெள்ளை அணுக்கள் நோய்க்கிருமி சரீரத்தில் புகாதபடி தடுப்பதைப்போல, பரிசுத்தமுள்ள கிறிஸ்துவின் இரத்தம் பாவம் நம்மில் புகாதபடி நம்மைப் பாதுகாக்கிறது! அந்தகார சக்திகளை வேரறுக்கிறது! பிசாசின் கிரியைகளை அழிக்கும் படியாக வெளிப்பட்ட தேவ குமாரன் என்று வேதம் இயேசு கிறிஸ்துவை அழைக்கிறது!

'பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க, அவரும் அவர்களைப் போல மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானர். மரணத்திற்கு அதிபதியானவனைத் தமது மரணத்தினலே அழிக்கும்படிக்கும், ஜீவ

காலமெல்லாம் மரண பயத்தினாலே அடிமைத் தனத்திற்குள்ளானவர்கள் யாவரையும் விடுதலை பண்ணும்படிக்கும் அப்படியானார். (எபிரேயர் 2:14, 15)

அவருடைய இரத்தமே நமது வல்லமையான போராயுதம்! அவை அரண்களை நிர்மூலமாக்குகிறதற்குத் தேவ பலமுள்ளவைகளாயிருக்கிறது (II கொரி 10:4)

சத்துரு உன்னைத் தாக்கும் வரைக்கும் நீ காத்துக் கொண்டு இருக்க வேண்டியதில்லை. ஐயோ, இனி சாத்தான் எந்தப் போராட்டம் கொண்டு வருவானோ, எந்த வியாதிகளைத் தருவானோ, எந்த பில்லி சூனியங்களை நான் சந்திக்க வேண்டியிருக்குமோ, நானோ பெலவீனமாய் இருக்கிறேனே என்று நினைக்காதே!

ஏனெனில் 'பலமுள்ளவைகளை வெட்கப்படுத்தும்படி, தேவன் உலகத்தில் பலவீனமானவைகளைத் தெரிந்து கொண்டார்.' (I கொரி 1:27) சத்துருவின் கோட்டையைத் தகர்க்க பெலவீனனான உன்னால் முடியும்! ஏனெனில் அரண்களை நிர்மூலமாக்குகிற தேவபெலனான இயேசுவின் இரத்தம் உன் கைகளில் இருக்கிறது! சத்துரு உன்னைத் தாக்குமுன், நீ இயேசுவின் இரத்தத்தால் அவனைத் தாக்கி விடு! உன் குடும்பத்தை இரத்த அடைக்கலத்தில் எப்பொழுதும் வைத்திரு! வெளிப்படுத்தல் 12ம் அதிகாரத்தில் வானத்திலே உண்டான பெரிய யுத்தத்தைப் பற்றிப் படிக்கிறோம். அதில் தேவனுடைய பிள்ளைகளின் போராயுதம் என்ன தெரியுமா? "ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும் தங்கள் சாட்சியின் வசனத்தினாலும் அவனை ஜெயித்தார்கள்" (வெளி 12:11) என்று வாசிக்கிறோம்!

1. ஆட்டுக்குட்டியின் இரத்தம்!

2. சாட்சியின் வசனம்!

அவனை ஜெயித்தார்கள். முறியடித்தார்கள். மேற்கொண்டார்கள். சாத்தான் தாழத் தள்ளப்பட்டுப் போனான்.

இங்கு இயேசு கிறிஸ்து ஆட்டுக்குட்டி என்று அழைக்கப்படுகிறார்! பரி, பேதுரு இது குறித்து எழுதும்போது, 'குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்களே' (I பேதுரு 1:19)

பழைய ஏற்பாட்டிலே, எகிப்தியரிலிருந்து இஸ்ரவேலரை வேறு பிரித்துக் காட்டவும், இஸ்ரவேல் குடும்பத்திற்கு பாதுகாப்புத் தரவும், பஸ்கா ஆடு அடிக்கப்பட்டது. ''ஈசோப்புக் கொழுந்துகளின் கொத்தை எடுத்துக் கிண்ணியில் இருக்கும் இரத்தத்தில் தோய்த்து, அதில் இருக்கும் அந்த இரத்தத்தை வாசல் நிலைக் கால்களின் மேற் சட்டத்திலும் வாசலின் நிலைக்கால்கள் இரண்டிலும் தெளியுங்கள்" யாத் 12:22

ஈசோப்பு கொழுந்து நமது சாட்சியின் வசனத்திற்கு நிழலாட்டமாயிருக்கிறது. நமது சாட்சிகள் வசனத்தை கிறிஸ்துவின் இரத்தத்தில் தோய்த்து நம் குடும்பத்தில் தெளிப்போம். சத்துருவின் போராட்டத்தில் தெளிப்போமாக!

ஜெயிக்க முடியாதபடி தடுக்கிற அந்தகாரங்களையும், எழுப்புதலுக்கு விரோதமாய்க் கிரியை செய்யும் சத்துருவின் வல்லமையையும் இயேசுக் கிறிஸ்துவின் இரத்தத்தோடு எதிர்த்து நில். அப்பொழுது ஜெயம் பெறுவாய். இம்மானுவேலின் நரம்புகளிலிருந்தும், காயங்களிலிருந்தும் புறப்படும் இரத்த ஊற்றே நமது அடைக்கலம்; பாவ பரிகாரம்; யுத்தப் போராயுதம்! அல்லேலூயா!

அணு ஆயுதங்களும் கிறிஸ்துவின் இரத்தமும்!

1945 ஆண்டு, ஆகஸ்டு மாதம் ஆரும் நாள்!

ஜப்பான் தேசத்திலுள்ள ஹிரோசிமா என்ற பட்டணத்தின் மக்கள் வழக்கம் போல் நடமாடிக் கொண்டிருந்தார்கள். மார்க்கெட் பகுதிகளில் கூட்டம் அதிகம். சிறுவர்கள், குழந்தைகள், பள்ளிக்கூடங்களுக்குத் தீவிரித்துக் கொண்டிருந்தனர்.

திடீரென்று அந்தப் பட்டணத்தின் அபாயச் சங்குகள் சத்தமாக ஊத ஆரம்பித்தன.

அந்நிய விமானம் ஒன்று வருகிறது என்று மக்களுக்கு எச்சரித்தன.

மக்கள் யாரும் அந்த எச்சரிப்புக்கு செவிசாய்த்ததாகத் தெரியவில்லை. அது யுத்த காலமாக இருந்தபடியால் விமானங்கள் வருவதும் போதும் சர்வ சாதாரணமாய் இருந்தது. எனவே பயமில்லாமல் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் வேலைகளைச் செய்து கொண்டிருந்தார்கள்.

திடீரென்று ஒரு விமானம் தாழப்பறந்து ஹிரோசீமா பட்டணத்தின் மேல் வந்தது. அது தோன்றி சரியாக நாற் பத்து மூன்று வினடி நேரம்தான்! விமானத்திலிருந்த அணு குண்டு, அந்தப் பட்டணத்தின் மேல் விழுந்ததும், மாபெரும்

வெடி சத்தம். அதைத் தொடர்ந்து ஆயிரம் சூரியன்களை பூமியில் உருக்கி ஊற்றியதைப் போல் உஷ்ணம், மின்னலைப் பழிக்கும் ஒளி அப்படியே இறங்கியது.

கண்மூடித் திறப்பதற்குள் இலட்சக் கணக்கான மக்கள் அப்படியே சாம்பலாகி நீராவியோடு கலந்து விட்டனர். ஜனங்களும் மிருக ஜீவன்களும் உயிரினங்களும் ஒரே விநாடி யில் மாயமாய் மறைந்து ஆவியாகிச் செல்லும் அகோரக் காட்சி! அவ்வளவு செல்வமும் சீருமாய் இருந்த பட்டணம், மயானக் காடாய் மாறிற்று. அத்தனை பெரிய நகரத்தில் ஒரு கட்டிடம் கூட, மிஞ்சாமல் தரையோடு நொறுங்கி விழுந்தது!

அந்த வெப்பத்தின் விளைவால் எத்தனையோ மைல்க ளுக்கு அப்பாலிருந்தவர்களின் சரீரம், துணிமணிகள் திடீ ரென்று தீப்பிடித்தன. உடலெல்லாம் கருகின. எங்குப் பார்த்தாலும் அக்கினி சூறாவளிக்காற்று, விஷவாயு கதிரியக்கக் கதிர்கள், உயிர்களை ஆயிரமாயிரமாய்க் குடித்து அட்டகாசமாய் முன்னேறிச் சென்றது!

மிகத் தூரத்திலிருந்து வேடிக்கை பார்த்துக்கொண் டிருந்தவர்களின் கண்கள் அதின் குழிகளுக்குள் அப்படியே வெந்துபோய்விட்டன. முகங்கள் கருகிப் பேய்த் தோற்ற மாய்க் காட்சியளித்தன. எங்கே ஓடுவது என்று தெரியாமல் மக்கள் பல திசைகளிலும் கூக்குரலிட்டுக்கொண்டு பதுங்க இடம் தேடினர். மரணமோ உயிர்களை வேட்டையாடி ஜீவனை உறிஞ்சியது!

அணுகுண்டு போடப்பட்டதால் ஏற்பட்ட புகையும், புழுதியும் வான மண்டலத்தில் 40,000 அடி உயரத்திற்கு மேல் எழும்பியது. ஆ! எத்தனை மகா பயங்கரம்!

1. இனி காலம் செல்லாது!

இது சம்பவித்தது 1945ஆம் ஆண்டு. அதன்பின் ஐந்து ஆண்டுகளுக்குள் 40 நாடுகள் அணுகுண்டுகளைத் தயாரிக்க

ஆரம்பித்துவிட்டன. விஞ்ஞானிகள் துரிதமாக செயல்பட்டு அணுகுண்டுகளைக் காட்டிலும் ஆயிரம் மடங்கு கொடிதான நுக்கிலியர் ஆயுதங்களை, ஹைட்ரஜன் குண்டுகளைத் தயாரிக்க ஆரம்பித்தனர். இன்று நாம் வாழும் உலகத்தைப் போல நாற்பது ஆயிரம் உலகங்களை அழிக்குமளவிற்கு ஏராளமான அணு ஆயுதங்களைச் செய்து வைத்துவிட்டு, அதைப் பாதுகாக்கும் வழி தெரியாமல் தவிக்கிருர்கள்.

இனி காலம் செல்லாது! உலக வரலாற்றின் கடைசி விஞடி நேரங்களுக்கு வந்துவிட்டோம்! இனி ஒரு தலைமுறை பூமியிலே எழும்புமா என்பதே சந்தேகத்துக்குரியதாகி விட்டது.

2. வேதம் எச்சரிக்கிறது!

''இப்பொழுது இருக்கிற வானங்களும், பூமியும் அந்த வார்த்தையிஞலேயே அக்கினிக்கு இரையாக வைக்கப்பட்டு தேவ பக்தியில்லாதவர்கள் நியாயந்தீர்க்கப்பட்டு அழிந்து போகும் நாள் வரைக்கும் காக்கப்பட்டிருக்கிறது (II பேதுரு 3:7)

எசேக்கியேல் 9:6 சொல்கிறது. உங்களுடைய சகல வாசஸ்தலங்களிலுமுள்ள பட்டணங்கள் நிர்மூலமும் உங்கள் மேடைகள் பாழுமாகும்.

தானியேல் எச்சரிக்கிருர் ''யாதொரு ஜாதியாரும் தோன்றினது முதல் அக்கால மட்டும் உண்டாயிராத ஆபத்துக் காலம் வரும் (தானி 12:1)

நம் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து மிகுந்த அன்போடும், மனதுருக்கத்தோடும், நண்பனே, உனக்கு ஆலோசனை சொல்கிருர். ''நீங்கள் நினையாத நேரத்தில் அந்த நாள் உங்கள் மேல் வராதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள். பூமியிலெங்கும் குடியிருக்கிற அனைவர் மேலும் அது ஒரு கண்ணியைப் போல் வரும். ஆகையால் இனிச்

சம்பவிக்கப் போகிற இவைகளுக்கெல்லாம் தப்பி மனுஷ குமாரனுக்கு முன்பாக நிற்க பாத்திரவான்களாக எண்ணப் படுவதற்கு எப்பொழுதும் ஜெபம் பண்ணி விழித்திருங்கள்" (லூக்கா 21: 31-36)

3. நீ பயங்கர ஆபத்திலிருக்கிறாய்!

சகோதரனே, சகோதரியே, நீ கிறிஸ்துவின் இரத்த அடைக்கலத்தில் இல்லாவிட்டால் மகா பயங்கரமான ஆபத்திலிருக்கிறாய் என்று நிச்சயம் அறிந்து கொள். மனந் திரும்பு. பாவ வழிகளை விட்டு விலகி உடனே கிறிஸ்து வண்டை வந்துவிடு; உலகத்தையோ, அதன் ஆசை இச்சை களையோ சார்ந்து எதிர்பார்த்திருக்க உலகத்தில் ஒன்று மில்லையே! அவையெல்லாம் சாம்பலும் குப்பையும்தான். அணுகுண்டிலிருந்து வெளிவரும் வெப்பமும் உஷ்ணமுமே இவ்வளவு கொடியதாயிருந்தால் அக்கினியும் கந்தகமும் எரிகிற நரகம் எவ்வளவு பயங்கரமான வேதனையுடையதாக இருக்கும்! நீ சற்றே சிந்தித்துப் பார்! அங்கே அக்கினி அவி யாமலும், புழு வேகாமலும் இருக்குமே! வேண்டாம், அந்த நித்திய வேதனே! அன்பின் கிறிஸ்துவண்டை வா, கல்வாரி அண்டைவா. இரு கரம் நீட்டி ஆவலாய் அழைக்கும் உன் சிருஷ்டிகரிடம் வந்து விடு. அவருடைய இரத்தம் உன்னைக் கழுவும்படி இன்றும் ஆறாய் ஓடிக் கொண்டிருக்கிறது!

4. அணு ஆயுதங்களை எதிர்க்கும் நமது போராயுதம்!

யுரேனியம் என்ற தாதுவின் அணுக்கள் பிளக்கப்படும் போது அணுசக்தி வெளியாகிறது. ஆனால் இயேசு கிறிஸ்து வின் சரீரம பிளக்கப்பட்டபோது மாபெரும் தெய்வீக அன்பு வெளியானது. பாவமன்னிப்பை உண்டாக்கும் தூய இரத் தம் வெளிப்பட்டது. நோய்களைக் குணமாக்கும் பரிகாரி இரத்த ஊற்று உண்டாயிற்று. சர்ப்பங்களை நொறுக்கும் வல்லமை பீறிட்டது. ஆ! எவ்வளவு மேன்மை!

அணு ஆயுதங்களின் கொடூரங்களிலிருந்தும், நரக வேதனைகளிலிருந்தும் பாதுகாக்கக் கூடியது இயேசு கிறிஸ்துவின் இரத்தம் மட்டுமே; அந்த அடைக்கலத்திற்கு வா! இரத்தத்தால் மீட்கப்பட்டவர்கள், இரண்டாம் மரணத்தினால் சேதப்படுவதில்லை! ஆமென்; அல்லேலூயா!

5. ஒரு துளி கிறிஸ்துவின் இரத்தம் போதும்!

T.L. ஆஸ்பார்ன் நடத்திய பெரிய உயிர் மீட்சிக் கூட்டங்களைப் பற்றிப் படித்திருக்கிறேன். இலட்சக்கணக்கானோர் மத்தியில், கண்ணீரோடும், உபவாசத்தோடும் ஊழியஞ் செய்கிறவர் அவர்! ஒருசிலநிமிட நேரங்கள் மட்டுமே அவர் பிரசங்கம் இருப்பினும், முடிவில் தேவனுடைய மனதுருக்கமுள்ள இரத்தம் மக்கள் மத்தியில் இறங்க ஆரம்பிக்கும். பிசாசுகள் பறந்தோடும், வியாதிகள் சுகமாகும்; முடவர், குருடர் விடுதலையாவார்கள், பரிசுத்தஆவி பொழிந்தருளப்படும், மாபெரும் இரட்சிப்பு கரை புரண்டு ஓடும்.

பிளவுண்ட கன்மலையான கிறிஸ்துவின் சரீரத்திலிருந்து வழியும் இரத்தத்துளிகள், அணு ஆயுதங்களை 'விட வல்லமையானவை! நம் தேசம் முழுவதும் நரக ஆக்கினையிலிருந்து மீட்கப்பட கிறிஸ்துவின் இரத்தத்தை விசுவாசத்தோடு நமது கரங்களில் ஏந்தி தேசத்தில் தெளிப்போமாக! 'ஆ! தேவனே, எங்கள் தேசத்திற்கு இரங்கமாட்டீரோ?' என்று மன்றுடுவோம்!

6. தடை செய்கிறவனே எழுந்திரு!

"அக்கிரமத்தின் இரகசியம் இப்பொழுதே கிரியை செய்கிறது. ஆனாலும் தடை செய்கிறவன் நடுவிலிருந்து நீக்கப்படுமுன்னே அது வெளிப்படாது. (II தெச 2:7)

அணுகுண்டுகளின் அக்கினி உலகத்தைச் சுட்டெரியாதபடி இன்று தடை செய்து கொண்டிருப்பவர்கள் யார்? பரிசுத்தாவியானவரும், உலக மீட்புக்காக மன்றாடும் ஜெபவீரருமே! ஆகையால்தான் இந்தக் கடைசி வினாடி நேரத்திலும் கிருபையின் வாசல் திறந்திருக்கிறது!

தடை செய்கிற ஜெபவீரனே, எழுந்திரு! அந்தகார சக்திகளைத் தடை செய்ய வேண்டியது நமது கடமை! அக்கினியினின்று உலகம் மீட்கப்பட நாம் எழுந்து நின்று கிரியை செய்ய வேண்டிய கடைசி வினாடி நேரங்கள் இவை!

பயன்படுத்திக் கொள்! கிறிஸ்துவில் பெலப்படு!!

வாசகர்களுக்கு...

"ஜெயமளிக்கும் கிறிஸ்துவின் இரத்தம்" என்ற புத்தகத்தை இத்துடன் தொடர்ந்து வாசிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம். அதில் விபரமாக கிறிஸ்துவின் இரத்தத்தால் ஏற்படும் ஆசீர்வாதங்களை எழுதியிருக்கிறோம். அனேகர் அந்தப் புத்தகத்தால் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறார்கள். உடனே எழுதுங்கள். விலை ரூ.4/- மட்டுமே.

பரிசுத்தாவியின் வல்லமை!

காஞ்சிபுரத்தில், பக்தியுள்ள டாக்டர் ஒருவரை அறிவேன். அவர் தன் வீட்டு மாடியில் தனியாக தியானித்துக் கொண்டிருந்தபோது திடீரென்று அவரைச் சுற்றிலும் அதிகமான குரங்குகள் சூழ்ந்து கொண்டன. தப்பியோட எந்த வழியும் இல்லை. அவை கடித்துக் குதறும் அபாயம் இருந்ததால், அவர் தவித்தார். கர்த்தர் சொன்னார், ''நீ கண்களை மூடி ஆவியில் விண்ணப்பஞ் செய்!" அவர் உடனே கீழ்ப்படிந்தார். கண்களை இறுக மூடி, தேவன் தந்தருளிய அன்னிய பாஷையில் மெதுவாக ஜெபித்துக் கொண்டிருந்தார். சிலவினாடிகள் கழித்து தன் கண்களைத் திறந்தபோது, அந்தக் குரங்குகள் அவரை விட்டு ஓட்டமாய் ஓடிக்கொண்டிருப்பதைக் கண்டார்! ஆம்... 'பலத்தினாலுமல்ல, பராக்கிரமத்தினாலுமல்ல, என்னுடைய ஆவியினாலேயே ஆகும்' என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். (சகரியா 4:6)

1. ஆவியினாலேயே ஆகும்: ராஜாவாகிய சாலமோன் கட்டிய தேவாலயம் இடிக்கப்பட்டு, இஸ்ரவேலர் பாபிலோனுக்கு சிறைபிடிக்கப்பட்டுப் போய்விட்டனர். செருபாபேல் என்று சொல்லப்பட்ட வாலிபன், எருசலேமுக்குத் திரும்ப வந்து, இடிந்து கிடந்த தேவ ஆலயத்தைக் கட்ட ஆரம்பித்தான். அவனது கைகள் ஆலயத்திற்கு அஸ்திபாரம் போட்டன. ஆனால் கட்டிட வேலையின்போது அவன் எவ்வளவு பாடுபட வேண்டியதிருந்தது! பணவசதியோ, பெரிய ஒத்துழைப்போ, அவனுக்குக் கிட்டவில்லை.

பர்வதத்தைப் போல சத்துருவின் பயங்கரமான போராட்டம் வேறு! சோர்ந்து போய்விட்ட செருபாபேலுக்கு கர்த்தரின் ஆலோசனை என்ன தெரியுமா? 'உன் பலத்தினாலுமல்ல; உன் பராக்கிரமத்தாலுமல்ல, இந்த ஊழியத்தை நிறைவேற்ற ஆவியானவராலேயே ஆகும்' என்பதுதான். (சகரியா 4:6)

ஆவியானவருக்கு இடங்கொடு! உன் குடும்ப வாழ்க்கையைச் சீர்திருத்த உன்னால் கூடாது. உன் ஞானத்தினாலும் அறிவினாலும் உன் பிள்ளைகளைத் திருத்த உன்னால் முடியாது. தோல்வியடைந்தது போதும். உன் யுத்தத்தை ஆவியானவர் செய்யட்டும். ஆவியினாலேயே ஆகும் என்பதை உணர்ந்துகொள்வாய்!

அன்று எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து இஸ்ரவேல் ஜனங்களை மீட்டுவிட, தன் பலமும் பராக்கிரமும் போதும் என்று கருதிய மோசே, ஓர் எகிப்தியனை அடித்து மணலில் புதைத்தான். அதன் விளைவாக, எகிப்தைவிட்டே ஓட வேண்டிய நிர்ப்பாக்கியம் ஏற்பட்டது. ஓரேப் பர்வதத்தில் கர்த்தர் மோசேக்குக் கற்றுக் கொடுத்த பாடம், ''ஆவியினாலேயே ஆகும் என்பதே! ஆவியானவரைச் சார்ந்துகொண்ட மோசே செங்கடலில் எகிப்தியர் சேனையை கவிழ்த்துப் போட்டான்.

2. போராயுதமான ஆவியானவர் :

சாதாரண மனுஷர் மேல் ஆவியானவர் இறங்கும்போது அவர்கள் மாபெரும் பெலவான்களாக, யுத்தத்தில் பராக்கிரமமுள்ளவர்களாய் மாறுகிறதை பழைய ஏற்பாடு முழுவதிலும் நாம் வாசிக்கிறோம். சிம்சோன் மீது கர்த்தருடைய ஆவி பலமாய் இறங்கினதினால் அவன் தன் கையில் ஒன்றும் இல்லாதிருந்தும், கெர்ச்சிக்கிற பால சிங்கத்தை ஆட்டுக்குட்டியைக் கிழித்துப் போடுகிறதுபோல் கிழித்துப் போட்டான். (நியாதி 14:6) ஒத்னியேல் மேல் ஆவியானவர் இறங்கினார். அவன் மெசொப்பொத்தாமியா

ராஜாவாகிய கூசான்ரிஷதாயீமை ஜெயித்தான். (நியா 3:10) கர்த்தருடைய ஆவியானவர் கிதியோன் மீது இறங்கினார். (நியா 6:34) கர்த்தருடைய ஆவியானவர் யெப்தாவின்மேல் இறங்கினார். அவன் கீலேயாத்தையும் மனாசே நாட்டையும் கடந்துபோய், அம்மோன் புத்திரரை முறியடித்தான். (நியாதி 11:29) வேதத்தில் ஏராளமான உதாரணங்கள் உண்டு! பலவீனமான யாவர் மேலும் பலமுள்ள ஆவியானவர் இறங்கி பெலப்படுத்தியதுபோல, ஜெயமுள்ள ஜீவியம் செய்ய உன்னையும் பெலப்படுத்துவாராக!

3. உன்னத பெலனான ஆவியானவர்!

ஆவியின் போராயுதமே ஆதித்திருச்சபையின் போராயுதமாயிருந்தது. இயேசுகிறிஸ்து பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுவதற்கு முன்னால் சீஷர்களிடம் அறிவித்த ''உன்னத பெலன்" அதுதான்! பரிசுத்தாவி உங்களிடத்தில்வரும் போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும் யூதேயா முழுவதிலும் சமாரியாவிலும் பூமியின் கடைசி பரியந்தமும் எனக்கு சாட்சிகளாயிருப்பீர்கள்'' (அப் 1:8)

''நீங்களோ, உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும் வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள்'' என்றார் (லூக் 24:49) உன் சாட்சியின் ஜீவியத்தைப் பாதுகாக்க, உன்னால் முடியாது. ஆவியானவரின் பெலன் நிச்சயம் தேவை. அழுது, கண்ணீர் சிந்தி, வற்புறுத்திக் கேட்டுப் பரிசுத்தாவியைப் பெற்றுக்கொள்.

சீஷர்கள் மேல்வீட்டறையில் காத்திருந்து பரிசுத்தாவியின் நிரப்புதலைப் பெற்றுக்கொண்டார்கள். அது அவர்களை மாபெரும் பெலவான்களாக்கிற்று. ''இந்த இயேசுவை தேவன் எழுப்பினார். இதற்கு நாங்கள் எல்லாரும் சாட்சிகளாயிருக்கிறோம்" என்று முழங்கினார்கள்.

பரிசுத்தாவியின் பின்மாரி நமது நாட்களிலும் ஊற்றப்பட்டுக் கொண்டிருக்கிறது. கொஞ்சகாலம் மாத்திரம்

உண்டென்று சாத்தான் கெர்ச்சித்துக் கொண்டிருக்கிற படியால் கர்த்தரும் அவனை ஜெயிக்க, இந்தக் கடைசி நாட்களில் மாமிசமான யாவர் மேலும் தம் ஆவியை ஊற்றிக் கொண்டிருக்கிறார்! அபிஷேகித்துக் கொண்டிருக்கிறார், எனவே, உடனே ஆவியின் அபிஷேகம் பெற்றுக்கொள்!

4. கொடியேற்றும் ஆவியானவர்:

"வெள்ளம் போல் சத்துரு வரும் போது, கர்த்தருடைய ஆவியானவர் அவனுக்கு விரோதமாய்க் கொடியேற்றுவார்" (ஏசாயா 59:19) யுத்த களத்தில் போருக்கு வீரர்கள் அணிவகுத்துச் செல்லுமுன், சேனைகளுக்கு முன் தளபதி கொடி ஏந்திப் படையை நடத்திச் செல்வான். ஆம்! நமக்காக கொடியேந்தி முன் செல்பவர் ஆவியானவர். அவர் ஒரு போதும் அமைதியாயிரார் சத்துரு, உன குடும்பத்தில் பிரச்னைகளைக் கொண்டுவர வெள்ளம்போல் புறப்பட்டு வரும்பொழுது, உடனே ஆவியானவர் அவனோடு யுத்தஞ்செய்ய கொடியேற்றுவார். கல்வாரி நேசக்கொடி நமக்காக பறந்த வண்ணமாயிருக்கிறது. இஸ்ரவேலின் சேனைகளின் முன் நடந்த சர்வ வல்லமையுள்ளவர், உன் யுத்தங்களைத் தன் யுத்தமாகச் செய்து வெற்றி தந்தருளுவார்! ஆமென், அல்லேலூயா!

5. விடுதலையாக்கும் ஆவியானவர்:

கர்த்தருடைய ஆவி எங்கேயோ அங்கே விடுதலையுண்டு. (II கொரி 3:17) சாத்தானின் வேலை தேவ ஜனங்களை கட்டுக்குள் கட்டி வைப்பது, பில்லி சூனியக் கட்டுகள், அடிமைத்தனக் கட்டுகள், பொருளாசைக் கட்டுகள், பாரம்பரிய கட்டுகள், போன்ற பல கட்டுகளுக்குள் தேவ மக்களை கட்டி வைத்து, பிரகாசிக்க முடியாமற் செய்து விடுகிறான். கட்டவிழ்ப்பது ஆவியானவரின் வேலை ஏசாயா 61:1-3ல் வாசிக்கிறோம்.

கர்த்தருடைய ஆவியானவர் என்மேல் இருக்கிறார்... சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், கட்டுண்டவர்களுக்கு கட்டவிழ்த்தலைக் கூறவும்... அவர் என்னை அனுப்பினார். ரோமர் 8:2 சொல்கிறது, ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் என்னைப் பாவம், மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்கிற்றே"

''திரும்பவும் பயப்படுகிறதற்கு நீங்கள் அடிமைத்தனத்தின் ஆவியைப்பெறாமல், அப்பா, பிதாவே என்று கூப்பிடப் பண்ணுகிற புத்திர சுவிகாரத்தின் ஆவியைப் பெற்றீர்கள்". (ரோமர் 7:15)

6. நம் பட்டயமான ஆவியானவர்:-

''ஆவியின் பட்டயத்தையும் எடுத்துக் கொள்ளுங்கள்" (எபேசியர் 6:17) யுத்த களத்தில் தற்காப்புக்குரிய ஆயுதங்களான கேடகமுண்டு, முன்னேறிச் சென்று யுத்தம் செய்ய பட்டயமுண்டு! நமக்கு பட்டயம் ஆவியானவர் மட்டுமல்ல. அதைப்பற்றி' ''வேத வசனமாகிய ஆவியின் பட்டயம்" என்றும் வாசிக்கிறோம். ஏனென்றால் வேத வசனங்களெல்லாம் ஆவியானவராலே அருளப்பட்டிருக்கிறது. தேவனுடைய வார்த்தை இருபுறமும் கருக்குள்ள பட்டயம் என்று எபிரேயர் 4:12ல் வாசிக்கிறோம். இந்த ஆவியின் பட்டயம் நமது நாக்கோடு இணையட்டும். அப்பொழுது மாபெரும் எழுப்புதல் உண்டாகும். சாதுரிய பிரசங்கத்தினால் ஒரு ஆத்துமாவையும் ஆதாயம் பண்ணமுடியாது, ஆனால் ஆவியின் பட்டயத்தோடு பிரசங்கிக்கும்போது, ஆவியானவர் கேட்கிற மக்கள் மத்தியில் பாவ உணர்வை ஏற்படுத்துவார். கண்ணீரோடு மக்கள் ஒப்புக்கொடுப்பார்கள். ஆவியால் நிரப்பப்பட்டு தேவ செய்திகளை தேசத்திற்கு வழங்கு.

7. எண்ணங்களில் போர்:-

நேரடியாக யுத்தஞ் செய்ய முடியாத பிசாசானவன் எண்ணங்களில் அசுத்தத்தையும், கனவுகளில் ஆபாசத்தை

யும் கொண்டு வருவான். சிந்தனைகளினால் வீணாகிப் போகும் அநேக தேவபிள்ளைகள் உண்டு! தேவன் சகல சிந்தனைகளையும், நினைவுகளையும் கூட நியாயத் தீர்ப்புக்குக் கொண்டு வருவார் என்பதை மறந்து போகாதே!

எண்ணங்கள் உள்ளத்தில் ஆயிரமாயிரம் ஓடலாம். ஆனால் அவை இதயத்தில் நிலைபெற இடம் கொடுக்காதே! பறவைகள் ஆயிரம் ஒரு கிணற்றின் மேல் பறக்கலாம். ஆனால் சில அங்கே அமருகின்றன. சிறிது நேரம் கழித்து அவை எச்சமிடுகின்றன. அதிலுள்ள நுண்ணிய ஆல விதைகள் கிணற்றில் முளைத்தெழும்புகின்றன. மெதுவாய் வளரும் அந்தச் செடி, நாளடைவில் மரமாகி அந்தக் கிணற்றையே தூர்த்துப்போடுகின்றது. அதுபோல உன் ஆவிக்குரிய ஜீவியம் தூர்ந்துவிடாதபடி, எண்ணங்களையும், சிந்தனைகளையும் குறித்து ஜாக்கிரதையாயிரு!

எண்ணங்களில் ஏற்படும் யுத்தத்திற்கு நமது போராயுதம் ஆவியானவர்தான். "அவைகளால் நாங்கள் தர்க்கங்களையும், தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமையையும், நிர்மூலமாக்கி, எந்த எண்ணத்தையும், கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்துகிறவர்களாயிருக்கிறோம்" II கொரி 10:5.

இரவில் தூங்குவதற்கு முன் ஆவியில் நிரம்பிக்கொண்டே, ஸ்தோத்திரம் செய்து கொண்டே அப்படியே தூங்கிவிடு. அப்பொழுது இரவெல்லாம் உன் உள்ளத்தில் ஜெபம் இடைவிடாமல் ஓடிக் கொண்டே இருக்கும். "அந்தப்படியே ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவி செய்கிறார்" ரோமர் 8:26.

'கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது' (பிலி 2:5) உன் சிந்தையோடு கிறிஸ்துவின் சிந்தை இணைய ஆவியானவருக்கு உன்னை ஒப்புக்கொடு! கர்த்தர் ஜெய ஜீவியம் நிச்சயம் தந்தருளுவார்.

ஒருமனப்பாடு!

'ஒருவன் ஆயிரம் பேரைத் துரத்துவான்; இரண்டுபேர் பதினாயிரம் பேரைத் துரத்துவார்கள்.' (உபா 32: 30) என்பதே தேவன் இந்த யுத்த களத்தில் நமக்குத் தந்திருக்கும் வாக்குத்தத்தம்!

ஒருமனப்பாட்டின் மேன்மையையும், வல்லமையையும் வெளிப்படுத்தவே தேவன் இவ்விதமாய்க் கூறுகிறார்!

ஒருவன் ஆயிரம் பேரைத்துரத்தினால், இரண்டுபேர் இரண்டாயிரம் பேரைத்தான் துரத்த முடியும். ஆனால் இங்கே பதினாயிரம் பேரைத் துரத்துவார்கள் என்று வாசிக்கிறோம். இரண்டுபேர் ஒருமனமாக இணையும் போது, இரண்டு மடங்கு அல்ல, பத்து மடங்கு தேவ வல்லமை வெளியாகிறது!

ஒருமனப்பட, குறைந்தது இரண்டுபேர் அவசியம். இரண்டுபேர் கிறிஸ்துவின் நாமத்தில் கூடும்போது நிச்சயமாக தேவன் அங்கே இருப்பார். பூமியிலே இரண்டுபேர் ஒருமனப்பட்டிருந்தால், பரலோகத்திலிருக்கும் தேவன் அதை வாய்க்கச் செய்வார். நமக்கு இன்று இன்றியமையாத தேவை ஒருமனப்பாடுதான்!

பேதுருவின் மாபெரும் பிரசங்கத்தின் மகத்தான அறுவடையின் இரகசியமென்ன? எப்படி மூவாயிரம் பேர் இரட்சிக்கப்பட்டார்கள்? அப்போஸ்தலர் 2ஆம் அதிகாரம் 14 ஆம் வசனம் சொல்கிறது, "அப்பொழுது பேதுரு பதி

ஞெருவரோடு கூட நின்று அவர்களை நோக்கி" என்று வேதத்தில் வாசிக்கிறோம்.

ஆம், ''பதினொருவரோடு கூடபேதுரு"— அதுதான் இரகசியம். பிரசங்கிக்கிற ஒரு பேதுருவை, ஜெபத்தில் தாங்க ஒருமனமுள்ள பதினொருபேர் தயாராக நின்றார்கள், ஆகவேதான், அந்த மாபெரும் வெற்றியான ஆத்தும ஆதாயம் கிடைத்தது. யுத்தகளமாகிய ஊழியத்தில் ஒருமனப்பாடு இன்றியமையாதது.

ஒருமனமுள்ள ஜெபம் வல்லமையுள்ளது. ஒருமனமுள்ள ஊழியம் சத்துருவை முறியடிக்கக் கூடியது. ஒருமனமுள்ள குடும்பம் ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக் கொள்ளும். ஒருமனமுள்ள போர்வீரர்கள், படைத்தளபதிகள், வெற்றி மாலை சூடுவார்கள்.

சத்துருவான பெலிஸ்தியரை அழிக்க சிம்சோன் ஒரு வழியைக் கையாண்டான். முன்னூறு நரிகளைப் பிடித்து பந்தங்களை எடுத்து, வாலோடே வால்சேர்த்து, இரண்டு வால்களுக்கும் நடுவே ஒரு பந்தத்தை வைத்துக் கட்டி, பந்தங்களைக் கொளுத்தி, பெலிஸ்தியரின் வேளாண்மையிலே அவைகளை ஓடவிட்டு கதிர்க்கட்டுகளையும் வேளாண்மையும், திராட்சைத் தோட்டங்களையும் ஒலிவத் தோப்புகளையும் சுட்டெரித்துப் போட்டான்.

சுருக்கமாக— இரண்டு நரி—ஒரு தீப்பந்தம்— சத்துருவின் அழிவு!

சாதாரணமாக, இரண்டு நரிகளின் வால்களை ஒன்றாகக் கட்டினால் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பக்கம் இழுக்கும். முன்னேறாது. ஆனால் வாலில் தீ எரியும் போதோ, ஒரு பக்கத்திலேயே ஓட ஆரம்பிக்கும்.

பரிசுத்தாவியின் அக்கினி, உள்ளத்தில் எரியும் போது, சும்மா இருக்க முடியாது. ஆத்தும பாரம் நெருங்கி ஏவும். ஒரு மனப்பாடு, ஏக சிந்தையால் தேசம் இயேசு கிறிஸ் துவை அறிந்து கொள்ளும். நற்செய்தியால் நிரம்பும். சத்துருவின் கோட்டைகள் தகர்ந்து விழும்!

கசப்பு, பகை, வைராக்கியம், கோபம் ஆகியவை ஒருமனப்பாட்டிற்கு தடையாக நிற்பவை. ஆதலால் சகல கசப்புகளையும், வேரோடு பிடுங்குவோம்.

ஒருமனம் முதலாவது கணவன்— மனைவிக்கிடையே ஆரம்பிக்கட்டும். இரவு நேரங்களில் இருவரும் ஒருமனமாக குடும்ப ஜெபத்தில் ஆரம்பித்து, பின்னால் ஜெபக் குறிப்பு களை, இருவரும் கைமேல் கை வைத்து ஊக்கமாக போராடி ஜெபிக்கலாம். ஜெபத்திற்கு தேவன் பதிலளிப்பது மட்டு மல்ல, குடும்பத்தில் ஐக்கியம், சமாதானம், தெய்வீக பிரசன்னம் தந்தருளுவார்!

ஒருமனப்பாட்டிற்கு இன்றியமையாதது அன்பு! தெய் வீக அன்பு! திரளான பாவங்களை மூடுவது அன்பு! சகலவற் றையும் தாங்கி, சகலவற்றையும் சகிப்பது அன்பு! Iகொரி 13 ஆம் அதிகாரம் முழுவதையும் வாசித்துப் பார்த்து தெய்வீக அன்பு உன் உள்ளத்தையும், உன் சபையையும், உன் குடும்பததையும் நிரப்பும்படி ஊக்கமாக ஜெபி!

தெய்வீக அன்பு வரும்பொழுது, ஒருமனப்பாடு வரும், அன்பின் ஐக்கியம் வரும். ஒற்றுமை ஏற்படும்! கிறிஸ்து தம் சீஷரிடம் இந்த அன்பின் ஒருமனப்பாட்டை அதிகமாக எதிர்பார்த்தார். "ஒருமனப்பாட்டில் அவர்கள் தேறின வர்களாக இருக்கும்படிக்கும்"... நீர் என்னில் அன்பாயிருக் கிறது போல, அவர்களிலும் அன்பாயிருக்கிறதையும் உலகம் அறியும் படிக்கும்"(யோ 17 : 23)என்று உள்ளத்தை ஊற்றி ஜெபித்தார்.

''இதோ, சகோதரர் ஒருமித்து வாசம் பண்ணுவது எத்தனை நன்மையும் எத்தனை இன்பமுமானது?... அங்கே கர்த்தர் என்னென்றைக்கும் ஆசீர்வாதத்தையும் ஜீவனையும் கட்டளையிடுகிறார்'' (சங் 133:1, 3)

ஏன் சபைகளில் எழுப்புதலில்லை? ஏன் யுத்த களங்களிலே தோல்வி? ஏன் தேவன் கிரியை செய்ய முடியாததாய் தாய் இருக்கிறது? என்ன காரணம்?

அன்பு இல்லை! சகோதர ஐக்கியமில்லை! ஒரு மனப்பாட்டின் ஆவி இல்லை!

இன்றைக்கு எத்தனை விதமான சபைப் பிரிவுகள்? புதுப் புது சபைகள் திடீர் திடீரென்று முளைக்கின்றன! ஒன்றுக்கொன்று போட்டி! நான் பெரியவன், நீ பெரியவன் என்று சண்டை! அன்புத் தாழ்ச்சிகள்! புற ஜாதியார் மத்தியில் தேவ நாமம் தூஷிக்கப்படுவதற்கு ஏதுவாகிறது. சபைகளிலே உள்ள எலக்ஷன்ஸ் ஒரு சாபக்கேடு, சபை உடையவும் கட்சி மனப்பான்மை பெருகவும், ஒரு மனப்பாடு சீர்குலைந்து போகிறது!

நாம் இன்று ஒரு யுத்த களத்தில் நிற்கிறோம் என்பதை மறந்து போக வேண்டாம். நமக்குள்ளே இருக்கும் ஒவ்வொரு பிரிவினையும் சத்துருவுக்குத்தான் அனுகூலமாக முடியும்!

எனவே... ஒருமனப்பாட்டிற்காக தேவனிடம் மன்றாடுவோம். ஆதி அப்போஸ்தலர் நாட்களில் எழுப்புதல் தீச்சுடர் வேகமாகப் பரவியதற்கு காரணம் ஒரு மனப்பாடு தான்! ''அவர்களெல்லாரும் ஒருமனப்பட்டு, ஓரிடத்திலே வந்திருந்தார்கள்'' (அப் 2:1) என்று வாசிக்கிறோம்!

கையோடு கைகோர்ப்போம்-ஒருமனமாகுவோம். தேவ ஊழியத்தில் தோளோடு தோள் நின்று நற்செய்தியால் நம் தேசத்தை நிரப்புவோம்! இஸ்ரவேலின் சேனைகளின் முன் நடந்த கர்த்தர், நம் முன் செல்கிறார்! ஆமென்.

உபவாசத்தின் வலிமை!

நாள்பட்ட வியாதிகளுக்கும், சாதாரணமான மருந்துகளால் குணமாகாத நோய்களுக்கும், தீவிர சிகிச்சை அளிப்பதுண்டு. உணவு வகைகளில் பத்தியம் காக்க வேண்டிய சூழ்நிலைகளும் ஏற்படுவதுண்டு.

சாதாரண முறைகளில் மேற்கொள்ள முடியாத யுத்தங்களை, பிசாசின் போராட்டங்களை உபவாச ஜெபத்தால் மேற்கொள்ளலாம் என்று கிறிஸ்துவே போதித்தார்.

''இவ்வகைப் பிசாசு ஜெபத்தினாலும், உபவாசத்தினாலுமே அன்றி மற்றெவ் விதத்தினாலும் புறப்பட்டுப் போகாது என்றார்" மாற்கு 9:29

சில பிசாசுகள் அதட்டினால் ஓடிவிடும். சில எதிர்த்து நின்றால் தான் ஓடும். (யாக் 4:7) சில கிறிஸ்துவின் நாமத்திற்கு நடுங்கி ஓடும். ஆனால், சில வகை பிசாசுகள், பில்லி சூனியக் கட்டுகள், உபவாசத்தினாலும் ஜெபத்தினாலுமேயன்றி மற்ற விதங்களில் போகாது.

உபவாசம் என்றாலே அநேகருக்கு எட்டிக்காய் கசப்பு. என்ன வேண்டுமென்றாலும் செய்யத் தயார். ஆனால் உபவாசம் மட்டும் எடுக்கச் சொல்லாதீர்கள் என்று சொல்லுவார்கள். ஊழியர்கள் தன் பிரச்சனைக்காக ஒரு நாளை, இரண்டு நாள், ஏன் சாகும் வரைகூட உபவாசம் இருந்து ஜெபிக்க வேண்டும் என்று விரும்புவார்களே தவிர, தான்

ஒரு நாள் கூட உபவாசமிருந்து ஜெபிக்க முன் வரமாட்டார்கள்.

உபவாசத்தில் சரீரம் ஒடுக்கப்படுகிறது. ஆனால் அதே நேரத்தில் ஆத்துமா பெலனடைகிறது. இச்சைகள் அடங்குகின்றன. ஆவியில் விடுதலை ஏற்படுகிறது! சரீரம் பெலவீனமடைகிறது. ஆனால் ஆவியில் தேவனுடைய பெலன் பரிபூரணமாக விளங்குகிறது.

உண்ணுவதினாலேயே அநேக பாவங்கள் பெருகுகின்றன. ஆதி மனிதனின் வீழ்ச்சி, மறுக்கப்பட்ட பழத்தை உண்டதினாலேயே ஏற்பட்டது ஆகும்! மனிதனின் சோக சரித்திரம் புசித்ததில் ஆரம்பித்தது. அதை நிவர்த்தி செய்ய இயேசு உபவாசத்தில தன் ஜெய சரித்திரத்தை ஆரம்பித்தார்.

1. மாமிசமே முதல் சத்துரு :

உலகம், மாமிசம், பிசாசோடு நமக்குப் போராட்டமுண்டு. ஆனால் ஒருவனை முதன் முதலில் சோதனைக்குட்படுத்துவது அவனுடைய மாமிசமே.

அப்போஸ்தலனாகிய பவுல் சொல்கிறார். என் மனதின் பிரமாணத்துகக்கு விரோதமாய்ப் போராடுகிற வேறொரு பிரமாணத்தை என அவயவங்களில் இருக்கக் காண்கிறேன். அது என் அவயவங்களில் உண்டாயிருக்கிற பாவப் பிரமாணத்திற்கு என்னைச் சிறையாக்கிக் கொள்கிறது!

ஆதலால் நானே, என் மனதினாலே தேவனுடைய நியாயப் பிரமாணத்திற்கும், மாம்சத்தினாலேயோ பாவப் பிரமாணத்துக்கும் ஊழியஞ் செய்கிறேன்.

நிர்ப்பந்தமான மனுஷன் நான்! இந்த மரண சரீரத்தினின்று யார் என்னை விடுதலையாக்குவார்? (ரோமர் 7:23-25)

அப் பவுலின் ஆரம்ப நாட்களில் அவரது மாமிசத்தோடு அவருக்கு மாபெரும் யுத்தம் நடந்து கொண்டிருந்தது. ஆனால் அதில் வெற்றி பெற அவர் ஒன்று செய்தார். "நான் தானே ஆகாதவனாய்ப் போகாதபடிக்கு என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன்" (I கொரி 9:27) அதுதான் உபவாசம்!

பிணத்திற்கு தீ வைத்தவுடனே பிணம் எழும்ப ஆரம்பிக்கும். பக்கத்திலுள்ள வெட்டியான் தன் கையிலுள்ள தடியால் அடித்து நொறுக்குவான். சில நிமிடம் கழித்து பிணம் மீண்டும் எழுந்திருக்கும். உடனே மறுபடியும் பிணத்தைத் தடியால் அடிப்பான்.

உன் மாமிசம், இச்சை உனக்கு விரோதமாய் எழும்பும் போது உபவாச தடியால் சத்துருவை அடித்து விரட்டு! திடீர் என்று பொறுமையை இழக்கிறாயா? கோபம் பீறிட்டு வருகிறதா? இச்சைகளில் ஜெயமில்லையா? தடுப்பு ஆயுதம் உபவாசம்தான்!

உபவாசம் நமது சுயநலத்தை, சுய இச்சையை, மாமிசத்தை சிலுவையிலறைகிறது. உள்ளான ஆவிக்குரிய மனுஷனோ, கிறிஸ்துவோடு உறவாடி வல்லமையாக பெலப்படுகிறான்.

2. எஸ்தரின் போராயுதம் :

யூதாவின் சத்துருவான ஆமானிடம் ஆவிக்குரிய யுத்தம் செய்த எஸ்தரின் போராயுதம் என்ன தெரியுமா? உபவாசம் தான். ஒரு பக்கம் ஆமான் யூதரெல்லாரையும் முற்றிலும் அழிக்க திட்டம் தீட்டியிருக்கிறான். மறுபக்கம் அவன் சொல்வதையெல்லாம் கேட்க ராஜாவும் தயாராயிருக்கிறான். இக்கட்டான சூழ்நிலை. இனி காலம் தாழ்த்த முடியாது. சாதாரணமான போராயுதங்களை உபயோகிக்க நேரம் இல்லை! எனவே, எஸ்தர் உபவாசத்தின் மூலம் யுத்தஞ் செய்ய தீர்மானித்தாள்.

எஸ்தர், அவள் தாதிமார், மொர்தெகாய், சூசானி லிருக்கிற யூதர்கள் எல்லாரும் அல்லும் பகலும் மூன்று நாள் புசியாமலும் குடியாமலுமிருந்து உபவாசித் தார்கள்.

அந்த வல்லமையான ஆயுதத்தின் முன்னால் சத்துரு நிற்க முடியவில்லை. ஆமானும் அவன் பத்து குமாரரும் யூதரின் சகல எதிரிகளும் கொல்லப்பட்டார்கள். மாபெரும் ஜெயம் எஸ்தருக்குத்தான். உபவாச ஆயுதம் வல்லமை யுள்ளது!

3. யோசபாத்தின் போராயுதம் :

ராஜாவாகிய யோசபாத்திற்கு விரோதமாக அம்மோன் புத்திரரும், மற்ற மனுஷரும் யுத்தம் பண்ண வந்தார்கள். அவர்களை எதிர்க்க யோசபாத்தால் முடியவில்லை. எனவே விசேஷ போராயுதத்தைக் கையிலெடுத்தான். ''கர்த்தரைத் தேடுகிறதற்கு ஒரு முகப்பட்டு, யூதா வெங்கும் உபவாசத்தைக் கூறுவித்தான். (II நாளா 20:3)

ராஜாவும் மனுஷரும் உபவாசித்து ஜெபித்த ஜெபம் (II நாளா 20;5—13 வரை எழுதப்பட்டிருக்கிறது. அவர்கள் ஜெபித்து முடித்த வேளையில் ஒரு லேவியன் மேல் கர்த்தரு டைய ஆவியானவர் இறங்கி, ''இந்த யுத்தம் உங்களு டையதல்ல, தேவனுடையது," நீங்கள் தரித்து நின்று கர்த்தர் உங்களுக்குச் செய்யும் இரட்சிப்பைப் பாருங்கள்" என்றார்.

தேவனுடைய பிள்ளையே, நீ உபவாசித்து ஜெபித்து, கர்த்தருக்கு முன் உன்னைத் தாழ்த்தும்போது, உன் யுத்தத்தை நிச்சயமாக கர்த்தர் செய்வார். உங்கள் யுத்தம் உங்களுடையதல்ல; அது கர்த்தருடையது. ஆமென். உபவாசித்த பின் அவர்கள் பாடித் துதி செய்ய ஆரம்பித் தார்கள். அப்பொழுது கர்த்தர் யுத்தம் செய்ய வந்திருந் தவர்களை ஒருவருக்கொருவர் எழும்பப் பண்ணினார். அவர்கள் வெட்டுண்டு விழுந்தார்கள்!

எனவே சத்துருவின் சோதனைகளைக் கண்டு, சோர்ந்து போகாதே; கர்த்தர் உன்னோடு கூட இருக்கிறார்.

4. கிறிஸ்துவின் போராயுதம்:

வந்தபின் காப்பதைவிட வருமுன் காப்பது நல்லது என்று கிறிஸ்து, தம் உபவாசத்தின் மூலம் நமக்கு அறிவுறுத்து கிறார். ஆம், தன் ஊழியத்தை ஆரம்பிக்குமுன் தேவ பெலத்தைப் பெற்றுக் கொள்ள, சத்துருவை மேற்கொள்ள அவர் நாற்பது நாட்கள் இரவும் பகலும் உபவாசித்தார்.

சோதனைக்காரனால் அவர் முன் நிற்க முடியவில்லை. எல்லா சோதனைகளிலும் கிறிஸ்து வெற்றி சிறந்தார். தேவ தூதர்கள் வந்து அவருக்குப் பணிவிடை செய்தார்கள்.

ஊழியத்திற்கு முன், கிறிஸ்துவுக்கே உபவாசம் அவசிய மானால் நமக்கு எவ்வளவு அவசியம்! கிறிஸ்துவின் அடிச் சுவடுகளைப் பின்பற்றிய சீஷர்கள் உபவாசித்து ஜெபிக்கி றதை அப்பேரஸ்தலர் நடபடிகளில் நாம் வாசிக்கிறோம்.

5. உபவாச போராயுதத்தைப்பற்றி சில ஆலோசனைகள்

a) உபவாசத்தில் ஓர் உறுதியான நோக்கமிருக்கட்டும். அந்த நோக்கத்திற்காக ஜெபிக்கும்படி உன் உள்ளத்தைப் பக்குவப்படுத்திக் கொள், தனியான சந்தடியில்லாத இடம் நல்லது.

b) உபவாசம் என்பது வெறும் பட்டினி அல்ல. அதிக நேரம் ஜெபத்தில் தரித்திருக்க வேண்டும். உபவாசம்—ஜெபம், விசுவாசம் இந்த மூன்றும் இணைந்திருந்தால் பெரிய விளைவுகளைக் காணலாம்.

c) உபவாசத்தால் உன்னைக் கர்த்தர் முன்பாகத் தாழ்த்து, உபவாசத்தால் என் ஆத்துமாவை உபத்திரவப் படுத்தினேன் (சங் 35;13) என் ஆத்துமா வாடும்படி உப வாசித்து அழுதேன் (சங் 69:10) என்று சங்கீதக்காரன் சொல்கிறார்.

d) உபவாசம் கொஞ்சம் கொஞ்சமாக, திராணிக்கும், தேவைக்கும் தகுந்தபடி எடுக்கலாம். ஒரு நாளோ, எஸ்தரைப் போல மூன்று நாட்களோ (எஸ்தர் 4:13-16), தாவீதைப் போல மூன்று நாட்களோ (2 சாமு 12:16–23) அல்லது தானியேலைப்போல இருபத்தொரு நாட்களோ (தானி 10:3-13) மிகவும் அதிகமாக உபவாசிக்க விரும்பினால் நாற்பது நாட்களுக்கு மிகைப்படாமல் இருக்கட்டும். வேதத்தில் மோசே, யோசுவா, எலியா, இயேசு கிறிஸ்து நாற்பது நாட்கள் உபவாசமிருந்ததாக வாசிக்கலாம்.

e) புது விசுவாசியாயிருந்து, தொடர் உபவாசமிருக்க விரும்பினால், முதிர்ந்த அனுபவமுள்ள போதகரின் ஆலோசனையோடும், மேற்பார்வையோடும் எடுத்தால் நல்லது. ஏனெனில் உபவாச நாட்களில் சத்துருவின் போராட்டங்களும் அதிகமாயிருப்பதுண்டு.

f) சாதாரணமான உபவாசம், வெறும் தண்ணீர் மட்டும், சிலவேளைகளில் பழரசமும் சிலர் உபயோகிப்பதுண்டு. இரவு ஒரு வேளை மட்டும் உணவை ஒதுக்கி உபவாசம் எடுப்போரும் உண்டு. இது மிதமான உபவாசம். கடினமான உபவாசமாக தண்ணீர் கொஞ்சமும் குடியாமல், எச்சில் கூட விழுங்காமல் உபவாசம் எடுப்பவர்களும் உண்டு. வியாதியுள்ளவர்கள் இத்தகைய கடின உபவாசத்தைத் தவிர்ப்பது நல்லது.

g) உன் உபவாசங்கள் அந்தரங்கத்திலிருக்கட்டும். நீண்ட நாட்கள் உபவாசித்திருந்தால் தாரை ஊதுவியாதே! பரலோகத்தில் உன் பலனை இழந்து போக வேண்டியது வரும்.

h) ஒரேயடியாக, எப்பொழுது பார்த்தாலும் உபவாசம் உபவாசம் என்று சொல்லி நூதன சீஷனையிராதே! குடும்ப வாழ்க்கையை இடித்துப் போட்டு விடாதே. எல்லாவற்றிலும் நிதானமிருக்கட்டும். 1கொரி 7:5

கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

திடன் கொள்! பெலப்படு!!

யுத்த களத்தில் நிற்கும் வீரர்கள் பெலன் கொண்டு திடமனதாய் இருந்தால் மட்டுமே யுத்தஞ் செய்யமுடியும், கொஞ்சம் மனங் கலங்கிவிட்டால் அல்லது அதைரியம் அடைந்துவிட்டால் யுத்தத்தில் பராக்கிரமம் செய்ய முடியாது! நாம் திடன் கொள்வது எப்படி? இதோ ஐந்து குறிப்புகளை உங்கள் முன் வைக்கிறேன்!

1. தாவீது கர்த்தருக்குள் தன்னைத்திடப்படுத்தக்கொண்டான்:

''தாவீது மிகவும் நெருக்கப்பட்டான்; சகல ஜனங்களும் தங்கள் குமாரர் குமாரத்திகளிமித்தம் மனக்கிலேசமான தால் அவனைக் கல்லெறிய வேண்டும் என்று சொல்லிக் கொண்டார்கள். தாவீது தன் தன் தேவனாகிய கர்த்தருக்குள் தன்னைத் திடப்படுத்திக் கொண்டான்'' (Iசாமு 30:6)

எதிர்பாராத தோல்விகள், மனிதனைத் திடீரென்று தாக்கும்போது அவன் தடுமாறுகிறான். நிலைகுலைந்து போய் விடுகிறான். தற்கொலையை நோக்கி ஓடுகிறான். தன்னை எப்படி திடப்படுத்திக் கொள்வது என்று தெரியாமல் தவிக்கிறான்.

ஆனால், தேவனுடைய பிள்ளைகள் அப்படியல்ல, அவர்கள் தங்களைத் திடப்படுத்திக் கொள்ள திடமான கன்மலையானவர் அவர்களுக்கு உண்டு. மாறாத அன்பின் நேசர் உண்டு. திடமளிக்கும் கிறிஸ்துவின் கரம் உண்டு.

தாவீதுக்கு வந்த நெருக்கம் என்ன? தாவீது இடைவிடாமல் சவுலினுல் வேட்டையாடப்பட்டான். எனவே காடுகளிலே ஒளிந்து வாழ வேண்டிய பரிதாப நிலை ஏற்பட்டது. தன் பெற்றோரை மோவாபிய தேசத்திலும், மனைவி பிள்ளைகளை எல்லைப் பகுதியான சிக்லாகு என்ற இடத்திலும் ஒளித்துவைத்தான். தாவீதை பெலிஸ்தியர் துரத்திவிட்டனர். எனவே, அவனும், அவன் மனுஷரும் சிக்லாகுக்கு வந்தனர். அந்தோ பரிதாபம்! அந்தப்பட்டணம் அக்கினியால் சுட்டெரிக்கப்பட்டுக் கிடந்தது. அவன் மனைவியையும் பிள்ளைகளையும் அமலேக்கியர் சிறைப்பிடித்துக் கொண்டு போய்விட்டார்கள். மனம் நொந்த நிலையிலிருந்த தாவீதை, அவனோடிருந்த அவனது வீரர்களே கல்லெறிந்து கொல்ல வேண்டும் என்றிருந்தனர். தாவீது மிகவும் நெருக்கப்பட்டான்.

ஆனாலும் அவன் சோர்ந்து போகவில்லை! ''ஆபத்துக் காலத்தில் நீ சோர்ந்து போவாயானல் உன் பெலன் குறுகினது" என்று வேதம் சொல்கிறது.

அப்பவுல் சொல்கிறார். ''நாங்கள் எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டும் ஒடுங்கிப் போகிறதில்லை, கலக்கமடைந்தும், மனமுறிவடைவதில்லை, கீழே தள்ளப்பட்டும் மடிந்து போகிறதில்லை.'' (IIகொரிந்தியர் 4:8,19), இது தான் கர்த்தருக்குள் திடப்படுத்திக் கொள்வதின் இரகசியம்.

சோர்ந்து போகாதே! தோல்வியடைந்துவிட்டேன் என்று அவிசுவாசமான, அதைரியமான வார்த்தைகளைச் சொல்லாதே! தேவன், தம்மில் அன்பு கூறுகிறவர்களுக்கு 'சகலவற்றையும் நன்மைக்கேதுவாகவே செய்தருளுவார் (ரோமர் 8:28). அவர் சிங்கானத்தில் வீற்றிருக்கிறவர். சகலமும் உன் தேவனுடைய ஆளுகைக்குள் இருக்கிறது. உன் தேவன் உன் ஜெபத்தைக் கேட்கிறவர், அவர் சொல்ல ஆகும், கட்டளையிட நிற்கும். அவர் செய்ய நினைக்கிற காரியம் தடைப்படாது. அவர் பிரசன்னம் எப்பொழுதும் உன்னோடிருக்கும். ''நான் உன்னை விட்டு விலகுவதில்லை உன்னைக் கை

விடுவதில்லை" என்று உடன்படிக்கை செய்திருக்கிறாரே. ஆம்; உன்னைக் காக்கிறவர் உறங்கார்! உன் பெலனாகிய கர்த்தருக்குள் உன்னைத் திடப்படுத்திக் கொள். தோல்வியின் வார்த்தைகள் ஒன்றுகூட உன் உதடுகளில் வர வேண்டாம். கிறிஸ்து வெற்றி சிறந்தவர். அவரைப் பின்பற்றுகிறவர்கள் ஒருக்காலும் தோல்வியடைவதில்லை.

தாவீது தன் தேவனுக்குள் தன்னைத் திடப்படுத்திக் கொள்ளுமுன், தனக்குப் பெலனில்லாமற் போகுமட்டும் அழுது, தன் பெலத்தைக் கர்த்தரிடம் ஒப்புக் கொடுத்து, தேவ பெலத்தைச் சுதந்தரித்துக் கொண்டான். பின் யுத்தத்திற்குப் புறப்பட்டுச் சென்று, அவன் இழந்துபோன எல்லாவற்றிலும் ஒன்றும் குறைவுபடாமல் எல்லாவற்றையும் திருப்பிக் கொண்டது மட்டுமல்லாமல், அமலேக்கியரை முறிய அடித்து அவர்களைக் கொள்ளையிட்டான்.

(Iசாமு 30: 18-30)

நீ உன் தேவனாகிய கர்த்தரில் உன்னைத் திடப்படுத்திக் கொண்டால் நிச்சயம் ஜெயம் உனக்கே!

2. தேவ ஊழியர் திடப்படுத்துகிறார்கள்:

''நீ யோசுவாவுக்குக் கட்டளை கொடுத்து அவனைத் திடப்படுத்திப் பலப்படுத்து. அவன் இந்த ஜனங்களுக்கு முன்பாக கடந்துபோய், அவனே நீ காணும் தேசத்தை அவர்களுக்குப் பங்கிட்டுக் கொடுப்பான்" என்றார் (உபா 1:38. 3: 28).

தேவன் மோசேயின்மூலம் யோசுவாவைத் திடப்படுத்தினார். யோசுவா கானானைச் சுதந்தரித்துக் கொள்ள வேண்டுமானால், ஊழியரான மோசேயால் திடப்படுத்தப்பட்டு பெலப்பட வேண்டியது அவசியமாயிருந்தது. பரம கானானாகிய புதிய எருசலேமை சுதந்தரித்துக் கொள்ள நாம் முன்னேறும்படி தேவன் ஊழியர்களை நமக்கென்று நியமித்திருக்கிறார்.

உன் உள்ளத்தின் பாரங்களை உலகத்தாரிடம் சென்று சொல்லி ஆறுதலடைய முயற்சிக்காதே! அதனுல் உன் உள்ளத்தின் வேதனை அதிகரிக்குமே தவிர, குறையாது. தேவ ஊழியரிடம் போ; கர்த்தருடைய பிள்ளைகளே, உனக்கு ஜெபித்து தேவ ஆலோசனையைக்கூறி திடப்படுத்தட்டும்.

தேவன் சபையிலே ஆவியின் வரங்களைத் தந்தருளுவதின் நோக்கங்களில் இதுவும் ஒன்று; தமது மக்களை எப்பொழுதும் திடப்படுத்தும்படி, ஆலோசனையைத் தரும் ஞானத்தால் தமது ஊழியர்களை நிரப்புகிருர். ஆலோசனைக் கர்த்தரல்லவா அவர்?

3. தேவ தூதர்கள் திடப்படுத்துகிருர்கள்:-

''அப்பொழுது மனுஷ ரூபமான ஒருவன் திரும்ப என்னைத் தொட்டு என்னைத்திடப்படுத்தி, பிரியமான புருஷனே, பயப்படாதே, உனக்குச் சமாதானமுண்டாவதாக, திடன் கொள், திடன் கொள், என்ருன்' (தானி 10:19)

பெர்சியாவின் ராஜாவாகிய கோரேஸ் அரசாண்ட நாட்களில் தானியேல் உபவாசித்து ஜெபிக்க ஆரம்பித்தார். அப்பொழுது கடைசி நாட்களில் சம்பவிக்கப் போவதை தானியேலுக்கு அறிவிக்க தேவதூதனைவர் புறப்பட்டு வந்தார். பெலனில்லாமல் திடனற்றுப் போயிருந்த தானியேலை தேவதூதன் திடப்படுத்துகிறதை மேலே குறிப்பிட்ட வசனத்தில் காணலாம்.

ஆம்; தேவதூதர்கள் நம்மைத் திடப்படுத்துகிருர்கள். இரட்சிப்பை சுதந்தரிக்கும் நமக்குப் தேவன் மாபெரும் தேவதூதர்களை பணிவிடை ஆவிகளாய் தந்திருக்கிருர். (எபி 1:14)

4. சகோதரரை சகோதரர் திடப்படுத்துகிருர்கள்:-

''அவர்கள் சேர்ந்து வந்து, ஒருவருக்கொருவர் ஒத்தாசை செய்து, திடன் கொள் என்று சகோதரனுக்கு சகோதரன் சொல்லுகிருன் (ஏசாயா 41:5,6)

கிறிஸ்தவ மார்க்கத்தில், விசுவாசிகள் அனைவரும் ஒரே சரீரத்தின் அவயவங்களாக இருக்கின்ருர்கள். எனவே ஒருவர் பாரத்தை ஒருவர் சுமப்பதும் ஒருவருக்கொருவர் ஜெபத்தில்

தாங்குவதும் எவ்வளவு அவசியமாயிருக்கிறது! அதனால் தான் சங்கீதக்காரன் சொல்கிறார், ''சகோதரர்கள் ஒருமித்து வாசம் பண்ணுகிறது எத்தனை நன்மையும் எத்தனை இன்பமுமானது? (சங் 133:1)

நீ மற்ற விசுவாசிகளால் திடப்படுத்தப்பட வேண்டும் என்று எவ்வளவு விரும்புகிறாயோ, அவ்வளவாய் நீ மற்றவர்களையும் திடப்படுத்த வேண்டியது அவசியம்,

5. கிறிஸ்துவின் காயப்பட்ட கரங்கள் நம்மைத் திடப்படுத்துகின்றன!

''தம்முடைய கைகளையும், கால்களையும் அவர்களுக்குக் காண்பித்தார்." (லூக் 24:40)

இயேசு சிலுவையில் அறையப்பட்ட பின்பு, சீஷர்கள் யூதருக்குப் பயந்ததினால் நடுங்கி ஓர் வீட்டறையில் கதவுகளைப் பூட்டிக் கொண்டு ஒளிந்திருந்த வேளையில் அவர்களைத் திடப்படுத்த இயேசு செய்ததென்ன?

தம் கைகளையும் கால்களையும் அவர்களுக்குக் காண்பித்தார்! ஆழமான தழும்புகளுள்ள அவரது அருமையான கரத்திலும், கால்களிலும் சீஷர்கள் கண்டதென்ன?

தேவாதி தேவன் அவர்களோடு செய்த அன்பின் உடன்படிக்கையையே கண்டார்கள். உங்களை என் உள்ளங்கைகளில் வரைந்திருக்கிறேன். என் கரங்களிலிருந்து உங்களை யாரும் பறித்துவிட முடியாது. உங்களுக்காக இத்தனைப் பாடுகளைச் சகித்த நான் எல்லாவற்றையும் உங்களுக்காக செய்வது அதிக நிச்சயமல்லவா? (ஏசாயா 49 : 16, ரோமர் 8: 13)

திடன் கொண்டார்கள்; மாபெரும் சுவிசேஷ வீரர்களானார்கள். தங்கள் உயிரையும் பொருட்படுத்தாமல் கிறிஸ்துவுக்காக இரத்த சாட்சியானார்கள்.

ஆம் நம்மை திடப்படுத்துவது நமது நேசரின் காயப்பட்ட கரங்களே! கவலையும் கண்ணீரும் நிறைந்த இந்த உலகத்தில் கிறிஸ்துவின் கரம் எவ்வளவாய் நம்மை திடப்படுத்துகிறது!

தேவனுடைய பிள்ளையே, திடன் கொள். கிறிஸ்துவிலே வல்லமையாகப் பெலப்படு!

துதிப்போம் வாரீர்!

துதித்து ஸ்தோத்தரித்து அனுபவப்பட்டவர்கள், துதியின் மூலமாகவே எல்லாவற்றையும் எளிதாகச் சாதித்து விடுவார்கள்!

எரிகோ கோட்டை இஸ்ரவேலருக்கு முன்பாக அடைக்கப்பட்டிருந்தது. தகர்த்த ஆயுதம் என்ன? துதி அல்லவா? எக்காளங்களை ஊதுகையில் ஜனங்கள் ஆர்ப்பரித்தார்கள்; எக்காள சத்தத்தை ஜனங்கள் கேட்டு; மகா ஆரவாரத்தோடு முழங்குகையில் அலங்கம் இடிந்து விழுந்தது. (யோசுவா 6:20) உன் உதடுகளிலுள்ள துதியின் சத்தம், அடைபட்ட கோட்டைகளை உடைத்து, திறந்தவாசலை உனக்குத் தந்தருளும்.

பவுலும் சீலாவும் சிறையில் அடைபட்டிருந்த போது உபயோகித்த ஆயுதம் என்ன? பாடலோடு கூட துதி அல்லவா? நடு இராத்திரியிலே பவுலும், சீலாவும் ஜெபம் பண்ணி தேவனைத் துதித்துப்பாடினார்கள்; அப் 16:25 சிறைச்சாலையின் அஸ்திவாரங்கள்அசையும்படிபூமியதிர்ந்தது. கதவுகள் திறவுண்டன. கட்டுகளெல்லாம் கழன்று போயின.

ஸ்தோத்திரம் செய்யும்போது கர்த்தரின் இருதயமெல்லாம் மகிழ்கிறது. ஏனெனில் அவர் துதியின் மத்தியில் வாசஞ்செய்கிறவர். 'கர்த்தரை நான் எக்காலத்திலும் ஸ்தோத்தரிப்பேன்; அவர் துதி எப்பொழுதும் என் வாயிலிருக்கும்' என்று நீ தீர்மானஞ் செய்வாயானால், நீ ஒருபோதும் அசைக்கப்படுவதில்லை.

1. யூதா புறப்படக்கடவன்:-கானானியரை எதிர்த்து யார் முதலில் புறப்பட வேண்டும் என்று இஸ்ரவேலர் கர்த்தரிடம் விசாரித்தபோது, கர்த்தர் 'யூதா எழுந்து புறப்படக்கடவன்' என்றார் (நியாதி 1:1-2)

யூதா என்ற பெயருக்கு 'கர்த்தரைத் துதிப்பேன்' என்று அர்த்தம் (ஆதி 29:35). கர்த்தரைத் துதிக்கும் துதியே யுத்தத்திற்கு முன் செல்லும் எக்காளமாயிருக்கட்டும். எருசலேம் பட்டணத்தைப் பிடித்தவர்கள் இந்த யூதா கோத்திரத்தார்தான். நம் ஆண்டவராகிய இயேசுவும் யூதாக்கோத்திரத்தில் பிறந்தார். கர்த்தரை துதிப்போமாக!

2. கிதியோனின் எக்காளம்:- துதி எப்படி ஒரு போர் ஆயுதமாகிவிடும் என்று அநேகர் கேட்பதுண்டு. கர்த்தர் அதை கிதியோன் மூலம் நிரூபித்துக் காட்டினார். கிதியோனைச் சேர்ந்த 300 பேருடைய போர் ஆயுதங்கள் என்ன தெரியுமா? பானையும், தீவெட்டியும், எக்காளமும் தான். பானையை உடைத்தனர், இது சுயத்தை நம்மைவிட்டு நீக்குதலை காண்பிக்கிறது. தீ வெட்டியை பிரகாசிக்கச் செய்தனர், பரிசுத்தாவியானவரை வெளிக்கொண்டு வரவேண்டும். எக்காளத்தை ஊதினர். எக்காளம், துதிக்கும் ஸ்தோத்திரத்திற்கும் நிழலாட்டமாக இருக்கிறது.

முன்னூறு பேரும் எக்காளம் ஊதுகையில் கர்த்தர் எதிரிகளின் பாளயமெங்கும் ஒருவர் பட்டயத்தை ஒருவருக்கு விரோதமாக எழும்பப் பண்ணினார். மாபெரும் வெற்றியை இஸ்ரவேலர் சுதந்தரித்துக் கொண்டார்கள். (நியாதி 7:22).

3. துதிப்போம் வாரீர்!

ஒரு தேவனுடைய பிள்ளையின் வாழ்க்கையில் மிகப் பெரிய போராட்டங்கள் வந்தன. அதனை எப்படிச் சந்திக்க வேண்டுமென்று தெரியாமல் அவர் தவித்தபோது, அவர் பழைய ஏற்பாடு புதிய ஏற்பாட்டில் தேவன் எவ்வளவாய் தம் மக்களுக்காக வழக்காடி, யுத்தஞ்செய்தார் என்று

ஆராய ஆரம்பித்தார். அவர் வாயில் துதியும் ஸ்தோத்திரமும் எழும்பியது. அந்த பக்தர்களுக்காகவெல்லாம் உதவி செய்து யுத்தம் செய்த தேவன், ஏழையாகிய எனக்கும் ஜெயத்தைத் தருவார் என்கிற விசுவாசம் உண்டாயிற்று. 'என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்தரி...அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே (சங்கீதம் 103:2)

4. அவர் கிருபை என்றுமுள்ளது!

ஆபிரகாமின் மனைவியாகிய சாராயின் நிமித்தம் பார்வோனையும் அவன் வீட்டாரையும் மகா வாதைகளால் வாதித்தவரைத் துதியுங்கள். அவரே நமக்காக வழக்காடுகிறவர்! (ஆதி 12;17).

உன் சத்துருக்களையெல்லாம் உன் கையில் ஒப்புக்கொடுத்த உன்னதமான தேவனுக்கு ஸ்தோத்திரம் என்று கூறி ஆபிரகாமை ஆசீர்வதித்த மெல்கிசேதேக்கோடு சேர்ந்து நாமும் தேவனை ஸ்தோத்தரிப்போம் (ஆதி 14:20)

சொப்பனங்களிலே, தேவன் அபிமலேக்கை எச்சரித்தார்; லாபானிடம், சொப்பனத்திலே. ''நீ யாக்கோபோடே நன்மையை அன்றி தீமை ஒன்றும் பேசாதபடி எச்சரிக்கையாயிரு" என்றார். (ஆதி 31:24) சொப்பனங்கள் மூலம் நம் சத்துருக்களைக் கலங்கடிக்கும் நம் தேவனாகிய கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

ஏசாவுக்குப் பயந்து யாக்கோபு தேவ சமுகத்தில் கதறியபோது, ஜெபத்தைக்கேட்டு, பகையை நட்பாக மாற்றியவரைத் துதியுங்கள், தீமை செய்ய வரும் கைகளை நன்மை செய்யும் கரங்களாக மாற்றுகிற வல்லமையுள்ளவரைப் புகழ்ந்து போற்றுங்கள் (ஆதி 31:24)

யாக்கோபுக்காக யுத்தஞ் செய்யும்படி, தேவன் சீகேம் பட்டணத்தைச் சுற்றிலுமுள்ள ஜனங்களுக்குள்ளே பயங்கரத்தை உண்டாக்கினார். அவர்கள் யாக்கோபையும் அவன் குமாரரையும் பின்தொடராதிருந்தார்கள் (ஆதி 35:5) கொஞ்சபேராயிருந்தாலும் அவர்களைத் தேவன் எவ்வளவாய்ப்

பாதுகாக்கிருர் என்பதை அறிந்து என் ஆத்துமாவே தேவனை ஸ்தோத்தரி.

ஒருவராய்ப் பெரிய அதிசயங்களைச் செய்கிறவரைத் துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது. (சங் 136:4) இஸ்ரவேலரின் விசுவாசம் பெருக அவர் மோசேயின் கோலை சர்ப்பமாக்கிக் காண்பித்தார். மடியிலிட்ட கையை குஷ்டரோகமாக்கிக் காண்பித்தார். நதி தண்ணீரை இரத்த மாக்கிஞர் (யாத் 4:1-14) ஆராய்ந்து முடியாத பெரிய காரி யங்களையும், எண்ணி முடியாத அதிசயங்களையும் அவர் செய்கிருர் (யோபு 9:10) அல்லேலூயா, அல்லேலூயா!

எகிப்தியருடைய தலைச்சன்களைச் சங்கரித்தவரைத் துதியுங்கள்; அவர்கள் நடுவிலிருந்து இஸ்ரவேல ரைப் புறப்படப் பண்ணினவரைத் துதியுங்கள்; சிவந்த சமுத்திரத்தை இரண்டாகப் பிரித்தவரைத் துதியுங் கள். அதின் நடுவே இஸ்ரவேலரைக் கடந்துபோகப் பண்ணினவரைத் துதியுங்கள். பார்வோனையும், அவன் சேனை களையும் சமுத்திரத்தில் கவிழ்த்துப் போட்டவரைத் துதியுங் கள். தம்முடைய ஜனங்களை வனந்திரத்தில் நடத்தின வரைத் துதியுங்கள் (சங்: 136) அந்த கர்த்தர் இன்றும் ஜீவ னுள்ளவராய் அதே அதிசயங்களை நம் வாழ்க்கையிலும் செய்ய வல்லமையுள்ளவராய் இருக்கிறதற்காய் அவரைத் துதியுங்கள். அவர் மாருதவர். நேற்றும், இன்றும் என் றும் மாருதவரானபடியால் அவரைத் துதியுங்கள். அவர் கிருபை என்றுமுள்ளது.

மோசே தன் கோலை வானத்துக்கு நேராய் உயர்த்திய போது அபிமலேக்கியரை முறியடித்த தேவனைத் துதியுங் கள். (யாத் 17:8:14) யோசுவா தன் ஈட்டியை ஆயி பட்டணத்திற்கு நேராய் நீட்டியபோது அதை அவன் கைகளில் தேவன் ஒப்புக்கொடுத்தார் (யோசுவா 8:18) உன் சத்துருக்களை தேவன் முறியடிக்கும்படி உன் உள்ளத்தை துதியோடு கூட தேவனுக்கு நேராக ஏறெடு, ஸ்தோத்திரம் ஆமென்.

ஒரு சாதாரண மனுஷனுக்காக, மாபெரும் அக்கினிப் பிளம்பாகிய சூரியனை கிபியோன் மேலும், சந்திரனை ஆதலோன் மேலும நிறுத்தி வெற்றிக் கட்டளையிட்ட நம் கர்த்யரைத் துதியுங்கள். (யோசுவா 8:18) என் கையின் கிரியைகளைக் குறித்து எனக்குக் கட்டளையிடுங்கள் என்று நம்மோடு உடன்படிக்கை செய்திருக்கிறவரை முழு பெலத்தோடும் ஸ்தோத்தரியுங்கள்.

கர்த்தர் மோசேயை நோக்கி, பாசானின் ராஜாவாகிய ஒக்கைக் குறித்து பயப்பட வேண்டாம். அவனையும், அவன் ஜனங்கள், எல்லோரையும் அவன் தேசத்தையும் உன் கைகளில் ஒப்புக்கொடுத்தேன். (எண் 21:33) என்று சொன்னதைப் போலவே ஒப்புக் கொடுத்த தேவனைத் துதியுங்கள். வாக்கு மாருதவரின் கிருபை என்றுமுள்ளது.

தொளாயிரம் இருப்பு இரதங்களோடு இஸ்ரவேலை எதிர்த்து வந்த சிசெராவோடு தேவன் வானத்திலிருந்து யுத்தம் செய்தார். "நட்சத்திரங்கள் தங்கள் அயனங்களிலிருந்து சிசெரோவோடே யுத்தம் பண்ணின். கீசோன் நதி, பூர்வநதியாகிய கீசோன் நதியே அவர்களை அடித்துக் கொண்டு போயிற்று" (நியாதி 5: 20, 21) இயற்கையை நமக்கு அனுகூலமாக்குகிறவரைத் துதியுங்கள். அவர் சொல்ல ஆகும், அவர் கட்டளையிட நிற்கும். அல்லேலூயா! தேவன் தம் ஜனங்களுக்காக யுத்தம் செய்ய, 'குளவிகளையும்' கூட ஆயத்தமாக வைத்திருக்கிருர். 'உன் முகத்தினின்று ஏவியரையும் கானானியரையும், ஏத்தியரையும் துரத்திவிட குளவிகளை உனக்கு முன்பாக அனுப்புவேன்" (யாத் 24:28) அவைகள் அவர்களை உங்கள் முனனின்று துரத்திவிட்டன. (யோசு 24:13) நம் தேவனைத் துதிப்போம்.

தேவனில் வல்லவர்களுக்கு புல்லும் போராயுதமாய் மாறுகிறது. சிம்சோனுக்குக் கழுதைத் தாடை மூலமாகவும், தாவீதுக்குக் கவண் கல் மூலமாகவும், கிதியோனுக்கு பானை எக்காளம் மூலமாகவும், மோசேக்கு சாதாரண கோல

மூலமாகவும் மாபெரும் யுத்தம் செய்ய பெலன்தந்த தேவனுக்கு ஸ்தோத்திரம். அவர் ஐந்து அப்பத்தையும் இரண்டு மீன்களையும் கொண்டு ஐயாயிரம் மக்களின் பசியை விரட்டியடித்தார். அல்லேலூயா!

யெப்தா தன் காரியங்களை யெல்லாம் மிஸ்பாவிலே தேவ சந்நிதியிலே சொன்னான். (நியாதி 11:11) மிஸ்பா என்றால் காவல் கோபுரம் என்று அர்த்தம். உறங்காமலும் தூங்காமலும் நம்மைக் காக்கிறவரைத் துதியுங்கள். யெப்தாவின் ஜெபத்துக்கு இறங்கி சீகோனையும். அவனுடைய எல்லா ஜனங்களையும் இஸ்ரவேலரின் கைகளில் ஒப்புக் கொடுத்தவரைத் துதியுங்கள்.

சாமுவேல் சர்வாங்க தகன பலியைச் செலுத்துகையில் பெலிஸ்தியர் இஸ்ரவேலரின் மேல் யுத்தம் பண்ண நெருக்கினார்கள். கர்த்தர் மகா பெரிய இடி முழக்கங்களை முழங்கப் பண்ணி அவர்களைக் கலங்கடித்ததினால், அவர்கள் இஸ்ரவேலுக்கு முன்பாக பட்டு விழுந்தார்கள். (I சாமு 7:10) நமது போராயுதங்களில் ஒன்று இடி முழக்கம். ஆமென். அல்லேலூயா!

கோலியாத்தின் ஈட்டியும், பட்டயமும், கேடகமும் அவனுக்கு ஜெயத்தையோ பாதுகாப்பையோ தரவில்லை. பண பலத்தோடும் அதிகார பெலத்தோடும் உன்னை எதிர்த்து வருகிறவர்களைக் குறித்து நீ கலங்காதே! இஸ்ரவேலுடைய இராணுவங்களின் தேவனாகிய கர்த்தரின் நாமத்தில் வந்த வாலிபனான தாவீது ஜெயம் பெற்றான். (I சாமு 17:45) இயேசுவின் நாமத்தில் நமக்கு ஜெயங் கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்! ஸ்தோத்திரம்!!

சேனைகளின் தேவனாகிய கர்த்தர் தாவீதோடு கூட இருந்தார். (II சாமு 5:6). சவுல் அநுதினமும் தாவீதைத்தேடியும், தேவன் அவனை அவன் கையில் ஒப்புக் கொடுக்கவில்லை. (I சாமு 23: 14). தாவீது தன் தேவனாகிய கர்த்தருக்குள்ளே தன்னை திடப்படுத்திக் கொண்

டான் (II சாமு 30: 6). தாவீது நாளுக்கு நாள் விருத்தியடைந்தான் (IIசாமு 5:6) தாவீதின் தேவன் நமது தேவன். தாவீதின் குமாரன் நமக்கு நிச்சயமாக இரங்குவார். ஜெயம் தருவார். துதிப்போம், வெற்றி பெறுவோம்!

முழு வேதப்புத்தகத்திலும் தேவன் தம் மக்களுக்காக எப்படி வழக்காடி யுத்தம் செய்தார் என்று வாசித்து, இருகரம் உயர்த்தி தேவனைத் துதித்துப்பாடு! தேவ கிருபை நிச்சயமாக உன்னில் பெருகும். அது மட்டுமல்ல, உன் பிரச்னைகள் உன் போராட்டங்களெல்லாம் உன் மகத்துவமுள்ள தேவனுக்கு முன்பாக அற்பகாரியம் என்பதைக் கண்டு கொள்வாய்!

யோசபாத் தன் விரோதிகளைக் கண்டு நடுங்கினான். தண்ணீரில்லாமல் தன் சேனைகள் வனாந்திரத்தில் மடிந்து போகுமோ என்று கலங்கினான். எலிசாவின் பதில் என்ன தெரியுமா? ''இந்தப் பள்ளத்தாக்கு முழுவதும் தண்ணீரால் நிரம்பும். மோவாபியரையும் உங்கள் கைகளில் ஒப்புக் கொடுப்பார். இது கர்த்தரின் பார்வைக்கு அற்பகாரியம்'' (II இரா 3:18)

நம் தேவனுக்கு முன், நமது பிரச்னைகள் எவ்வளவு பெரியனவாயிருந்தாலும் அற்பகாரியமே! ஜெயத்தின்மேல் ஜெயம் தந்து கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

கர்த்தர் எனக்காக யாவையும் செய்துமுடிப்பார் (சங் 138:8).

என் ஆத்துமாவே, நீ பலவான்களை மிதித்தாய் நியாதி 5:21)

துதிப்போம் வாரீர்! அவர் கிருபை என்றுமுள்ளது!!

போராயுத எழுத்துக்கள்!

இந்தப் புத்தகத்தின் மூலம் மீண்டும் உங்களைச் சந்திக்க கிருபை செய்த என் இரட்சகரை முழு இருதயத்தோடு துதிக்கிறேன். இந்தப் புத்தகத்தினால் ஆசீர்வாதம் பெற்றவர்கள், இந்தப் புத்தகத்தை வெளியிட மிகவும் உதவியாயிருந்த ஈரோட்டைச் சேர்ந்த சகோதரர் ஒருவருக்காகவும், அவர் குடும்பத்திற்காகவும் ஜெபிக்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். நான் இதுவரை நேரில் அவரைச் சந்தியாதிருந்தும் கூட, இப்புத்தகம் அச்சிடும் செலவில் பாதியை அவர் ஏற்றுக் கொண்டார். தன் பெயரை வெளியிட வேண்டாம் என்று அவர் அன்புடன் கேட்டுக் கொண்டபடியால், பரலோகத்தில் அவருக்கு பலனுண்டாகும்படி வெளியிடவில்லை.

சில மாதங்களுக்கு முன்பு ''கல்வாரிப்பாதையில் நீ'' என்ற புத்தகத்தை அச்சிட்டு, புத்தக ஊழியத்தை ஊக்குவியுங்கள் என்ற வேண்டுதலோடு ஏறக்குறைய 2000 பேருக்கு அவர்கள் கேட்காமலேயே அனுப்பிவைத்தேன். அதில் இருநூறுபேர் என்னை உற்சாகப்படுத்தி, எழுதியிருந்தார்கள். நான் அனுப்பிய சில பார்சல்கள் எனக்குத் திரும்பி வந்தன. நான் திறந்துபார்த்தபோது அதற்குள் என் புத்தகங்கள் இல்லை. ஆனால் ''இந்து மித்திரன்'' என்று சொல்லப்படும் R S S வாதிகளின் புத்தகங்கள் இருந்தன. என் புத்தகங்களை எடுத்து விட்டு அவர்கள் புத்தகங்களை அந்த கவருக்குள் சொருகி வைத்திருந்த அவர்களை கிறிஸ்துவின் அன்பின்கரம் அவர்தம் மந்தைக்குள் கொண்டுவர ஜெபியுங்கள்.

இது எழுத்தின் காலம். ''மிஷனெரிகள் சீனருக்கு எழுத்தறிவித்தனர். ஆனால் கம்யூனிஸ்ட்கள் புத்தகங்களை வழங்கி தங்கள் தேசமாக்கிக் கொண்டார்கள்'' என்பது உலகம் அறிந்த உண்மை!

நம் நாடும் அந்த நிலைக்குத்தான் போய்க்கொண்டிருக்கிறது. வாரம் தோறும் குமுதம் ஏழு லட்சம் பிரதிகளும், ஆனந்தவிகடன் 5 லட்சம் பிரதிகளும் மற்றபத்திரிகைகள் லட்சம் லட்சமாய் அச்சிடப்பட்டு மாம்ச இச்சைகளையும், பாவங்களையும் வளர்க்கின்றன. சினிமா பத்திரிகைகள் ஆயிரமாயிரமாகிவிட்டன! இது அச்சு எழுத்துக்களின் காலம். மக்களுக்கு அறிவுப்பசி எடுத்திருக்கிறது! கிறிஸ்தவ சமுதாயமே, நீ, உன் விசுவாசிகளுக்கு, உன் தேசத்திற்கு என்ன வைத்திருக்கிறாய்?

கர்த்தர் அங்கலாய்க்கிறார். ''என் வேதத்தின் மகத்துவங்களை அவர்களுக்கு எழுதிக் கொடுத்தேன். அவைகளை அந்நிய காரியமாக எண்ணினார்கள்" (ஓசியா 8:12)

தேவனே தன் விரல்களினால் முழு நியாயப்பிரமாணத்தையும் எழுதினார். சுவரில் எழுதி பெல்ஷாத்சார் என்ற இராஜாவை உணர்த்தினார் (தானி 5:1) விபசாரத்தில் பிடிபட்ட பெண்ணை கொண்டுவந்தவர்களுக்காக தரையில் எழுதினார்.

எழுத்து ஒரு போராயுதம். நிலைத்து நின்று யுத்தஞ் செய்யக் கூடியது! ''ஆ! நான் சொல்லும் எழுத்துகள் எழுதப்பட்டால் நலமாயிருக்கும்" என்று யோபு அங்கலாய்க்கிறார் (யோபு 19:23)

உங்கள் பொக்கிஷங்களைப் பரலோகத்தில் சேர்த்து வையுங்கள். பெட்டியிலும், பாங்கிலும் முடக்கப்பட்டிருக்கும் பணம், கர்த்தருடைய மகத்துவங்களை, கல்வாரி நேசத்தைப்பற்றி எழுதப் பயன்படட்டும். அப்பொழுது பரலோகம் உங்களுக்காக சாட்சியிடும். உங்கள் பலன் பெருகும்.

அடுத்த புத்தகம் வெளியிடப்பட முழுத் தொகையையோ பாதியையோ தந்து உதவுங்கள்! ''பின் சந்ததிக்காக இது எழுதப்படும். சிருஷ்டிக்கப்படும் ஜனம் கர்த்தரைத் துதிக்கும்" சங் 102:18.

சீக்கிரமாக வெளிப்படும் கர்த்தர், தம் மகிமையின் வருகையில் உங்களை மாசற்றவர்களாக நிறுத்துவாராக! கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!